237.

ஜமீந்தாரிணி

எழுதியது:

சரத்சந்திர சட்டர்ஜி

237/1-43

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
6 FEB 1943
237

2/61

மொழிபெயர்த்தது:

ஆர். ஷண்முகசுந்தரம்

புது மலர் நிலையம்,
கோயமுத்தூர்.

ஆர்பா

ஜமீந்தாரிணி

(சரத்சந்திர சட்டர்ஜி எழுதியது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 FEB 1943
MADRAS

894.8113

241

மொழிபெயர்ப்பாசிரியர்:

ஆர். ஷண்முகசுந்தரம்

★

புதுமலர் நிலையம்

35, வெரைட்டிஹால் ரோடு, கோயமுத்தூர்

[உரிமை பெற்றது] :: [விலை அணா 12

புஸ்தகம் கிடைக்குமிடம் :—

புதுமலர் நிலையம்

35, வெரைட்டிஹால் ரோடு, கோயமுத்தூர்

அடுத்த மலர்

கன்னிகா ஸ்திரி

முதலிய சிறு கதைகள்

ஆசிரியர்கள் :

ரா. ஆறுமுகம்

ரா. வெங்கடாசலம்

★

கன்னிகா ஸ்திரி முதலிய சிறு கதை மலரில் படிப்போரைப் பரவசப்படுத்தும் பன்னிரண்டு சிறுகதைகள் அடங்கி இருக்கின்றன. பெயர் பெற்ற இவ்விரு கதாசிரியர்களின் நடை, கங்கையும் யமுனையும் போல் பெருக் கெடுத்துப் பாய்ந்து செல்கிறது. உண்மை அனுபவங்களும், அற்புத சித்திரங்களும், கதாபிமானிகள் நெஞ்சை அள்ளிக் கொள்ளும் என்பதில் சந்தேக மில்லை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - FEB 1943
MADRAS

முன்னுரை

உண்மையான பொருளுக்கு என்றென்றும் உயர்வு இருந்து தான் வந்திருக்கிறது. நெடுகிலும் இலக்கியத்தில் இதற்குச் சான்றுகள் இருக்கின்றன. கம்ப ராமாயணம், முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப்பரணி முதற்கொண்டு நந்திக் கலம்பகம், கூளப்ப நாயக்கன் காதல் வரை உதாரணம் காட்டலாம்.

"நல்ல சரக்குக்கு மதிப்பு உண்டு. தமிழர்கள் ஆதரவு அவசியம் கிடைக்கும்" என்ற நம்பிக்கையுடன்தான் இம்மலர் அரும்புகிறது. சொந்த சிருஷ்டிகளுக்கு முக்கியத்வம் அளிப்பதே புது மலர் நிலையத்தின் நோக்கம். ஆனால், "முதன் முதலில் மொழி பெயர்ப்பாக ஏன் வருகிறது?" என்று கேட்கலாம். "இப்படிப்பட்ட மொழிபெயர்ப்பாக இருந்தால் அதைத் தள்ளி வைப்பதற்கில்லை" என்பதே இதற்குப் பதில்.

இந்தக் கதையில் எவ்வளவோ தனி விசேஷங்கள் இருக்கின்றன. பொதுவாகவே சரத்சந்திர சட்டர்ஜியின் எழுத்துக்களில் உண்மை அனுபவத்தையும், உயரிய மனோ பாவத்தையும் காணலாம். இக் கதையில் ஒரு அபூர்வமான உள்ளத்தைச் சித்திரித்திருக்கிறார், அன்யோன்யமாகப் பழகுகிறவர்களால் கூட இப்பண்பட்ட இதயத்தைத் தெரிந்துகொள்ள முடியவில்லை, அது காரணமாக, மற்றவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து 'பைத்தியம்' என்ற பட்டத்தைக் கட்டி விட்டார்கள்! காசிநாதனுடைய மனோ தர்மத்தைப் புரிந்துகொள்ளாத இளம் மனைவியான ஜமீந்தாரிணியின் தாபமும் தவிப்பும் கலை அழகுடன் வர்ணிக்கப்பட்டிருக்கிறது, கதையைப் பற்றி இன்னும் ஒரு வார்த்தை. **"சக்தி"** பத்திரிகையில் தொடர் கதையாக இது வெளிவந்து கொண்டிருக்

கும்போது மலேயா, பர்மா முதலான இடங்களிலிருந்தும் பாராட்டுக் கடிதங்கள் வந்தன. பல ரஸிகர்கள் மனப் பூர்வமாகப் புகழ்ந்தார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் இலக்கிய ரஸிகர் ஸ்ரீ கே. ஆர். சுப்பு ரத்தினம் அவர்களைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. மற்ற ரஸிகர்களைக் காட்டிலும் இவர் ஒரு படி மேலே போய் விட்டார். "இதைப் புத்தகமாகக் கொண்டு வந்தே யாக வேண்டும்" என்று அதற்கான காரியத்தையும் செய்துவிட்டார், அவருடைய முயற்சியின் பயனே இப் புதுமலர். இன்னும் பல புது மலர்களைத் தமிழ்த் தாய்க்கு அணிவிக்க வேண்டுமென்பதே விருப்பம்; செடிக்கு நீர் வார்க்க அன்பர்கள் இருக்கும் போது பூக்களுக்கா பஞ்சம்?

இலக்கிய உலகில் ஸ்ரீ வை. கோவிந்தன் அவர்களை அறியாதவர் யாரும் இல்லை என்றே கூறி விடலாம். தமது "**சக்தி**" பத்திரிகையில் தொடர் கதையாக ஜமீந்தாரிணியை வெளியிட்டு உதவியதோடு, புத்தகமாகப் பிரசுரிக்கவும் அனுமதி தந்ததற்கு எனது நன்றி,

கோவை
5-4-42.

ஆர். ஷண்முகசுந்தரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - FEB 1943
MADRAS

ஜமீந்தாரிணி

அத்தியாயம் 1

காசிநாதன் அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து விடுவான். உடனே குளித்துப் பூஜை செய்வான். பிறகு பண்டித தனஞ்சய பட்டாச்சார்யாவின் பள்ளிக்கூடத்துத் திண்ணையில் போய் உட்கார்ந்து கொள்வான். அப்படி உட்கார்ந்து, தர்சன சாஸ்திரத்தின் சூத்திரங்களை உருப்போட ஆரம்பித்து விட்டானானால், அப்புறம் அவனுக்கு வெளி உலகத்துச் சிந்தனையே யிருக்காது. அழகிய நெற்றியும் திடகாத்திரமான சரீரமும் படைத்த காசிநாதன், தர்சன சாஸ்திரத்தின் அடர்ந்த கானகத்தில் புகுந்த பிறகு, அதிலேயே வளைந்து வளைந்து சுற்றிக்கொண்டிருப்பான். அவனை இந் நிலையில் காணும் ஜனங்கள் விதம் விதமாகப் பேசிக் கொள்வார்கள். "தனது தந்தையைப் போலவே இவனும் ஒரு வித்வான் ஆவான்" என்று ஒருவர் சொல்லுவார். "படித்துப் படித்துத் தகப்பன் மாதிரி தானும் ஒரு பைத்தியமாகா திருக்கட்டும்" என்பார் இன்னொருவர். 'அவன் பைத்தியம் ஆகிவிடுவான்' என்று சந்தேகப்பட்டவர்களில், அவனுடைய மாமாவும் ஒருவர். அவர் அடிக்கடி, "அப்பா! நீயோ ஏழைப் பையன்; இவ்வளவு படித்து என்ன செய்யப் போகிறாய்? இதுவரையி

லும் நீ படித்திருக்கும் படிப்புக்கே எப்படியும் உனக்கு ஒரு பிடி அரிசியும், ஒரு முழத் துண்டும், சுலபமாகக் கிடைத்துவிடும். இத்தனை படித்து விட்டுக் கடைசியில் நீயும் காலஞ்சென்ற வங்யோபாத் யாயாவைப் போல, வீட்டின் ஒரு மூலையிலே உட் கார்ந்து, தலையாட்டிக் கொண்டிருக்கப் போகிறாயா? இப்போது இருக்கிற துளிச் சொத்தும் அப் போது போய்விடும்'' என்று சொல்வது வழக்கம்.

மாமாவின் இந்த உபதேசத்தைக் காசிநாதன் ஒரு காதால் வாங்கி, மறு காதால் விட்டுவிட்டான்.

பைத்திய மாகிவிடுவானோ என்ற பயத்தினால், மாமா அவனை மிரட்டுவார். வீட்டு வேலைகள் ஒன் றும் செய்யாததால், மாமி அவனைக் கோபிப்பாள். வியாகரணத்திலே அவன் விற்பன்னனா யிருப்ப தால், அவனை விட வயதில் மூத்தவர்களான மாமா வின் புதல்வர்கள் அவனைக் கேலி செய்வார்கள்.

ஆனால், காசிநாதன் இவற்றை யெல்லாம் பொறுத்துக்கொண்டு, ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளாமலிருந்தான்.

என்ன நடந்தாலும், தான் இதுவரையில் தினசரி என்ன செய்து வந்தானோ அதையே தான் இன்னும் அவன் செய்து வந்தான். சாயங் காலம் வெளியிலே உல்லாசமாக உலாவுவான். சில சமயம் ஆற்றங்கரையின் அரச மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு அஸ்தமன சூர்யனின் ரத் தச் சிவப்பு எப்படி ஆகாயத்திலிருந்து மறைகிற தென்று பார்த்துக் கொண்டிருப்பான். சில சமயம் கிராமத்து ஜமீன்தார் வீட்டுச் சிவன் கோவிலுக்

குச் சென்று, அங்கே செய்துள்ள தீபாலங்காரத்தைப் பாதி மூடிய கண்களுடன் பார்த்துக் களிப்பான். எங்குமே போகாமல், மாமாவின் வீட்டுக் கூடத்தில் ஒரு இருண்ட மூலையில் ஆசனம் விரித்து மௌனமாக உட்கார்ந்து விடுவதும் உண்டு.

உலகத்திலே அவனுக்கு ஒரு வேலையோ, உத்தேசமோ, இச்சையோ எதுவுமே இல்லாதது போல்தான் இருக்கும் அவனது நடத்தைகள். பன்னிரண்டாவது வயதிலேயே அவனது தந்தை இறந்து விட்டார். இந்த ஆறு வருஷங்களும் தன் மாமாவின் வீட்டிலே இவ்விதம் அவன் வளர்ந்து வருகிறான். இதுவரை என்ன செய்தோம், இப்போது என்ன செய்கிறோம், இனி என்ன செய்யப் போகிறோம் என்பதை யெல்லாம் அவன் சிந்திப்பதே யில்லை. அவனுக்கு இவ்விதமே தான் நாள் கழிந்தது. "எப்பொழுதும் வீட்டிலே இரண்டு வேளையும் அதட்டலும் மிரட்டலுமாய்ச் சாப்பிட்டுக்கொண்டே யிருக்கலாம்; எங்கும் போக வேண்டியதில்லை, ஒன்றும் செய்ய வேண்டியதில்லை" என்றே அவன் நினைத்துக்கொண்டிருந்தான். அவனுடைய அந்த அமைதியான இருளடைந்த மூலை அவன் ஆளுகையில்தான் சதா இருந்தது. யாரும் அதைப் பிடித்துக் கொள்ள வருவதில்லை; 'தள்ளி வேறொரு இடத்தில் உட்கார்' என்று அவனை எவரும் சொன்னதும் இல்லை. தெருவிலுள்ள சில மனிதர்கள் இரக்கமுற்று அவனைக் கூப்பிட்டு, "காசிநாதா! இப்படியே எப்போ

தும் ஒருவர் வாழமுடியாது; நீயும்கூட அப்படித் தான். ஏதாவது காரியம் செய்'' என்று சொல்வது வழக்கம். காசிநாதன் ஒன்றும் பதில் அளிப்ப தில்லை. 'என்ன செய்வது?' என்று மனதுக்குள் தானே கேட்டுக் கொள்வான். இவ்விதம் காசி நாதனின் நாட்கள் கழிந்து கொண்டிருந்தன.

அத்தியாயம் 2

அந்தக் கிராமத்து ஜமீன்தாரின் பெயர் பிரியநாத முகோபாத்யாயா. பிரியநாத பாபு மிக உயர்ந்த குலத்தில் பிறந்தவர்; பெரும் பணக்காரர். தாம் இவ்வளவு பெரிய மனிதரா யிருந்தும் கூட, குல மரியாதையைக் காப்பாற்றக்கூடிய சர்வகுண சம்பன்னனை ஒரு வரன் தமது மகளுக்குக் கிடைக்காமல் போகவே, அவருக்குத் தமது உயர்குலத்தின் மேலேயே எரிச்சல் உண்டாயிற்று! மனைவியிடம் இதைச் சொல்லும் போதெல்லாம், அவள், "எனக்கு ஒரே ஒரு பெண்தான் இருக்கிறாள். நாம் உயர் குலத்தில் பிறந்து என்ன பிரயோஜனம்?" என்பாள். அவருடைய குருதேவரும் அதே கிராமத்தில்தான் வசித்து வந்தார். அவரிடம் கேட்கவே, அவர், "ஹரி, ஹரி! நல்லகூத்து! உனக்குப் பணத்துக்கொன்றும் குறைவில்லை. உயர்ந்த வம்சத்தில் உதித்த யாராவது ஒரு ஏழைக்கு அவளைக் கன்னிகாதானம் செய்து கொடுத்து, மாப்பிள்ளையையும் பெண்ணையும் வீட்டிலேயே வைத்துக் கொள். அதுதான் பார்ப்பதற்கு நன்றாயிருக்கும். எவ்வளவு பெரிய வம்சம், எவ்வளவு உயர்ந்த குலம்! என்னவானாலும் இதன் பெருமை குறையலாமா?'' என்றார்.

பிரியநாத பாபு வீட்டுக்கு வந்து இதைத் தமது மனைவியிடம் சொன்னார். அவள் மிகுந்த சந்தோஷத்துடன், "ஆமாம், அப்படியே செய்யுங்கள்; நான்

உயிரோடிருக்கிற வரையிலும், கமலா என்னருகி லேயே இருக்கட்டும்'' என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். இவ்விதம் உயர்குல ஏழைப் பைய னுக்கு விவாகம் செய்து மகளையும் மருமகனையும் வீட்டிலேயே வைத்துக்கொள்வது என்ற எண் ணத்தை உறுதிப் படுத்திக்கொண்ட பிரியநாத பாபு, ஒரு நாள் பண்டித மதுசூதன முகோபாத்தி யாயாவின் வீட்டை அடைந்தார். பண்டிதர் அப் பொழுது தமது எஜமானர் வீட்டுக்கு நித்திய பூஜை செய்வதற்காகச் சென்றுகொண்டிருந்தார். திடீரென இவ்வளவு பெரிய ஜமீன்தார் வந்ததால், பண்டிதர் பெரிய சங்கடத்தில் ஆழ்ந்தார். ஜமீன் தாரை எங்கே உட்கார வைப்பது, எப்படி உபசரிப் பது என்று அந்த 'அப்பாவி'க்கு ஒன்றுமே தோன்றவில்லை.

மதுசூதனர் சங்கடப் படுகிறார் என்பதைப் பிரியநாத பாபு அறிந்து கொண்டார். அவர் சிரித் துக்கொண்டு, "உங்களிடத்தில் கொஞ்சம் ஜோலி யிருக்கிறது. வாருங்கள், கொஞ்சம் உள்ளே போய் உட்காருவோம்'' என்றார்.

"ஆஹா! வாருங்கள். ஆனால்—''

"ஆனால் கீனல் ஒன்றுமில்லை—வாருங்கள், உட்கார்ந்து எல்லா விஷயமும் சொல்கிறேன்.''

இரண்டு பேரும் வீட்டுக் கூடத்தில் சென்று உட்கார்ந்தார்கள். பிரியநாத பாபு, "உங்கள் மரு மகன் எங்கே?'' என்று கேட்டார்.

"எங்கேயாவது இருப்பான். பட்டாசார்யா வின் கலாசாலையில் படிக்கிறான்.''

"கொஞ்சம் அவனைக் கூப்பிடுங்கள்."

"கூப்பிடுகிறேன். ஏதாவது முக்கியமான விஷயமோ?"

"ஆம், முக்கியமான விஷயந்தான்."

ஒரு விஷயமும் தெரியாத வெகுளியான அந்தப் பையனுடன் இவ்வளவு பெரிய ஜமீன்தாருக்கு என்ன காரியம் இருக்க முடியும் என்பதை மதுசூதனர் என்னதான் யோசித்தும் ஊகிக்க முடியவில்லை! அதனால், அவர் சிறிது பயந்துகொண்டு, "ஏதாவது குற்றம் குறை செய்து விட்டானோ?" என்று கேட்டார்.

"குற்றம் குறைக்கு என்ன வந்தது?"

"பின்னே?"

பிரியநாத பாபு சிரித்து விட்டார்: "நான் அவனை எனது மாப்பிள்ளை யாக்கிக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். அந்த உறவிலே நீங்களும் எனக்குச் சொந்தம் ஆகிவிட்டீர்கள்" என்று சொல்லி, கடகட வென்று நகைத்தார். அவர் எதை நினைத்து இப்படிச் சிரித்தார் என்பதைத் தாம் அறிந்திருந்தால், மதுசூதனர் மறுபடி ஒன்றும் சொல்லியிருக்க மாட்டார். பண்டிதர் ஆச்சரியத்தால் பிது பிது வென்று விழித்துக் கொண்டு, பாபுவை வெறித்துப் பார்க்கத் தொடங்கினார். சிறிது நேரத்துக் கப்புறம், "யாரை? காசிநாதனையா?" என்று கேட்டார்.

"ஆம்"

"எதற்காக?"

"இவ்வளவு நல்ல குலத்துப் பையன் எங்கே தேடியும் எனக்குக் கிடைக்கவில்லே. உங்களுக்கு இதில் ஏதாவது தடை உண்டோ ?"

"தடையா! இது என் பாக்கியம் அல்லவா? ஆனல், அவன் பைத்தியமாயிற்றே!"

"பைத்தியமா? என்ன, நான் ஒரு நாளும் அப்படிக் கேள்விப் பட்டதில்லேயே?"

"அவனுடைய தகப்பனர் பைத்தியமா யிருந்தார்."

காசிநாதன் தந்தையைப் பிரிய பாபுவுக்கு நன்ருய்த் தெரியும். அவரை அநேகர் பைத்தியமென்று சொன்னதும் அவருக்குத் தெரியும். பிரிய பாபு சிறிது நேரம் யோசித்து விட்டு, "பையனின் பெயர் என்ன ?" என்று விசாரித்தார்.

"காசிநாத வந்யோபாத்யாயா."

"அவனேக் கூப்பிடுங்கள்—நான் பார்க்கிறேன்."

உடனே அவனே அழைத்துவர, மதுசூதனர் தமது சின்ன மகனே அனுப்பினர். அவன் போய், "காசிநாத அண்ணு!" என்று கூப்பிட்டான்.

காசிநாதன் நிமிர்ந்து பார்த்து, "ஏன் ?" என்ருன்.

"அப்பா கூப்பிடுகிருர்."

"ஏன் ?"

"அது எனக்குத் தெரியாது. ஜமீன்தார் பாபு வந்திருக்கிருர். அவர் உன்னேக் கூட்டிவரச் சொன்னர்."

காசிநாதன் மெதுவாகப் புஸ்தகத்தை மூடி வைத்து விட்டு, எழுந்து நடந்தான். அவன் வந்து இவர்களுக்கு எதிரில் உட்கார்ந்ததும், பிரிய பாபு அவனை மேலும் கீழும் உற்றுப் பார்த்துவிட்டு, "காசிநாதா! இந்நேரம் எங்கிருந்தாய் நீ?" என்று கேட்டார்.

"பட்டாசார்யாவின் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தேன்."

"நீ வியாகரணம் படித்திருக்கிறாயா ?"

காசிநாதன் தலையை அசைத்து, "ஆம், படித்திருக்கிறேன்" என்று பதில் அளித்தான்.

"இலக்கியம் படித்திருக்கிறாயா ?"

"ஏதோ கொஞ்சம் படித்திருக்கிறேன்."

"இப்பொழுது என்ன படிக்கிறாய்?"

"காவ்யதர்சனம்"

"சரி,போய்ப்படி" என்று பிரியபாபு சொன்னார்.

காசிநாதன் போய் விட்டான். தன்னை ஏன் அழைத்தார்கள், ஏன் போகச் சொல்லி விட்டார்கள் என்ற ஒன்றும் அவனுக்குத் தெரியாது; அதைப் பற்றி அவன் கவலைப்படவு மில்லை. பள்ளிக்கூடத்துக்குச் சென்று மறுபடியும் புஸ்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு நிம்மதியாய் முன் போலவே உட்கார்ந்து விட்டான்.

அவன் சென்ற பிறகு, பிரிய பாபு, "உம், அவன் பைத்திய மென்றல்லவா நீங்கள் சொன்னீர்கள்?" என்றார்.

மதுசூதனர், "இல்லை, அவன் பூராப் பைத்திய மல்ல. ஆனால், கொஞ்சம் விசித்திரமா யிருக்கிறான்;

அதனுல் ஊராரெல்லாம் அவனைப் பைத்தியமென்று சொல்கிருர்கள்'' என்ருர்.

“அதெப்படி?''

“அவன் எப்பொழுதும் புத்தகமும் கையுமாகவே உட்கார்ந்து கொள்கிருன்; அல்லது தன் மனம் போனபடி அங்குமிங்கும் திரிகிருன். ஒரு விஷயத்திலும் ஒரு வேலையிலும் மனம் நிலைத்திருப்பதில்லை—இதெல்லாம் கொஞ்சம் விநோதமாயில்லையா?''

“இவ்வளவு தானு? இன்னும் ஏதாவது செய்கிருனு?''

“ஆஹா! இன்னுமொன்றுண்டு. எப்பொழுதாவது வீட்டின் ஒரு இருண்ட மூலையில் மணிக்கணக்காகத் தனியே உட்கார்ந்து கொள்கிருன்.''

பிரிய பாபு சிரித்துக் கொண்டு, “இன்னும் ஏதாவதுண்டோ?'' என்ருர்.

இந்தச் சிரிப்பின் அர்த்தத்தை மதுசூதனர் கொஞ்சம் கொஞ்சம் அறிந்து கொண்டார். சிறிது மென்று விழுங்கிக் கொண்டே, “இல்லை, வேறு ஒன்றுமில்லை'' என்ருர்.

“ஆனுல், வீட்டிலே கொஞ்சம் கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கும் சம்மதமானுல், இந்த மாதத்திலேயே விவாகத்தை நடத்தி விடலாம்.''

பண்டிதர் உள்ளே சென்று இங்கே நடந்ததையெல்லாம் தமது மனைவியிடம் சொன்னுர். அதைக் கேட்ட அவள், ஆகாசத்திலிருந்து விழுந்தவள் போலத் திகைத்து விட்டாள். ஆச்சரியம் சிறிது குறைந்ததும், “நம்ம காசி, பிரிய பாபுவின் மாப்பிள்

ளையா! உங்களுக் கொன்றும் பைத்திய மில்லையே?'' என்று கேட்டாள்.

"இதில் பைத்தியம் என்ன வந்தது?''

"பைத்திய மில்லாமல் வேறே என்ன?''

"காசிநாதன் எவ்வளவு உயர்ந்த வம்சத்துப் பையன்? அதைக் கொஞ்சம் நினைத்துப் பார்.'

பண்டிதரின் மனைவி பெருமூச்சு விட்டுக் கொண்டு, "இந்தச் சம்பந்தம் நம்ம ஹரிக்குக் கிடைக்கலாகாதா!'' என்றாள். அது ஆகாத காரியம் என்பதை இருவரும் அறிந்தே யிருந் தார்கள்.

பண்டிதரும் பெருமூச்சுடன், "உன் அபிப் பிராயம் என்ன?'' என்று கேட்டார்.

பண்டிதரின் மனைவி துக்கத்தோடு, "என் அபிப்பிராயம் என்ன வாஞலென்ன?—கலியாண மாகட்டும்'' என்றாள்.

பண்டிதர் வெளியில் வந்து, ஒரு வறட்டுச் சிரிப் புடன், "அவள் என்ன ஆனந்தப்படுகிறாள் தெரி யுமோ! அடங்கா ஆனந்தம்! அவள்தான் இப் போது காசியின் தாய். எனது தங்கை இறந்த போது, அவனுக்கு இரண்டு வயசு கூடப் பூர்த்தி யாகவில்லை. அப்போதிருந்து இவள்தான் அவனைக் காப்பாற்றி வந்து ஆளாக்கினாள். அதற்கப்புறம் மைத்துனரும் இறந்துவிட்டார். அதுமுதல் காசி இங்கேயே இருந்து வருகிறான்'' என்றார்.

"எனக்கு அதெல்லாம் தெரியும். இன்றைக்கே எல்லா விஷயத்தையும் தீர்மானம் செய்து விடுங்கள்'' என்றார் பிரிய பாபு.

"தீர்மானம் என்ன செய்ய வேண்டும்? தங்களுக்கு எப்பொழுது சௌகர்யமோ அப்பொழுது அழைத்தால் ஓடிவந்து ஆசீர்வாதம் செய்கிறேன்."

"அதல்ல நான் சொல்வது; குல வழக்கத்தைப் பற்றியே கேட்கிறேன்."

"அது விஷயமாக நான் என்ன தீர்மானம் செய்வது? தாங்கள் என்ன உத்திரவு இடுகிறீர்களோ, அப்படியே நடக்கிறேன். ஆனாலும், தங்களுடைய மாப்பிள்ளையின் மாமியிடம்—ஒரு விதத்தில் அவன் தாயும் அவள் தானே—கொஞ்சம் கலந்துகொள்வது நல்லது."

" ஆமாம், அவசியம் கலக்க வேண்டும். அதைத்தான் நானும் சொன்னேன்."

இதன் பிறகு, பையனுடைய மாமியின் அபிப்பிராயம் விசாரிக்கப்பட்டது. அவனது தாய்க்குச் சமதையான மாமி, ஓர் ஆயிரம் ரூபாய் ரொக்கம் வாங்காமல், காசிக்கு எவ்விதத்தும் விவாகம் செய்ய முடியாது என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள். கடைசியில் அப்படியேதான் நடந்தது. பெரிய பாபு அதற்கொன்றும் தடை சொல்லவில்லை.

அத்தியாயம் 3

முதலில் எப்படி யிருந்தாலும், கொஞ்சகாலத்தில் காசிநாதன் ஜமீன்தார் வீட்டை விட்டு அப்பால் இப்பால் போகமுடியாத மாப்பிள்ளை ஆகிவிட்டான். தனது இந்த நிலையைக் கண்டதும், அவன் மனம் சந்தோஷத்தை இழந்தது. தான் இஷ்டப்பட்ட இடத்துக்கு இப்போது அவன் போக முடியாது; இஷ்டப்பட்ட இடத்தில் தங்கவும் முடியாது. சகல பொருள்களிலிருந்தும், அவன் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தான். அவன் போக விரும்பும் இடத்துக்குப் போக, மாமனாரின் அனுமதி கிடைப்பதில்லை; அப்படிக் கிடைத்தாலும், "எனது மருமகன் என்ன—பலானவர்கள் வீட்டுக்கெல்லாம் போவதா?" என்று சலித்துக்கொண்டேதான் அவர் அனுமதி தருகிறார். பாவம்! மருமகன் மனமிடிந்து உட்கார்ந்து விடுவானே தவிர, எப்படிப் போவான்? இம்மாதிரி நிலைமை ஏன் உண்டாயிற்று? அவன் ஏன் இவ்விதம் வைக்கப்பட் டிருக்கிறான்?—இப்படிச் செய்வதால், யாருக்கு என்ன திருப்தி? அவனுக்கு இது ஒன்றுமே புரியவில்லை. "நான் என்ன சாதாரண மனிதனா, அங்குமிங்கும் சுற்றுவதற்கு?" என்று சில சமயங்களில் தனக்குத் தானே சமாதானப் படுத்திக் கொள்வான். ஆனால், உள்ளுக்குள்ளே அவனுடைய இதயம், "உனக்குச் சந்தோஷமில்லை; சாந்தியில்லை" என்று புலம்பும். முன்னே அவன் ஒரு முள் காட்டிலே தன் இஷ்டம்போல்

சுற்றியலைந்து கொண்டிருந்தான்; இப்பொழுதோ ஒரு தங்கக் கூண்டிலே அடைபட்டிருக்கிறான். இதைக் காசிநாதன் உணரத் தலைப்பட்டான். முந்தி அவன் எல்லையற்ற பெருங்கடலிலே நீந்திக் கொண்டிருந்தான்; இப்பொழுதோ நாற்புறத்திலும் அரண் சூழ்ந்ததொரு புஷ்கரணியிலே அவனை விட்டிருக்கிறார்கள். அப்போது அவன் சமுத்திரத்திலே சுகமாக நீந்திக்கொண்டிருந்தான் என்பதில்லை—அங்கே அவனைப் புயலும் அலைகளும் வாட்டிக்கொண்டுதான் இருந்தன; ஆனாலும் இந்த நிர்மலமான புஷ்கரணி அதைவிடக் கஷ்டமாக இருக்கிறது. கொதிக்கும் வெந்நீர் அண்டா ஒன்றுக்குள்ளே தன்னை யாரோ தள்ளி விட்டார்கள் என்று அவன் அடிக்கடி எண்ணுவான். எல்லோரும் சேர்ந்து தன்னுடைய தேகத்தை விலைக்கு வாங்கிவிட்டது போலவும், இப்பொழுது அது தனக்குச் சொந்த மில்லைப்போலவும் அவனுக்குத் தோன்றியது. அவன் தலையிலே பழைய உச்சிக் குடுமியில்லை; கழுத்திலே அந்தத் துளசி மாலையு மில்லை. வெறுங்கால் இல்லை; வெறும் மேல் இல்லை. தனஞ்சய பட்டாச்சார்யாவின் பள்ளிக்கூட மில்லை. ஆற்றங்கரை அரசமர மில்லை. குடிசை வீட்டுக் கூடத்தின் அந்த மூலைகூட இல்லை! பழையது ஒன்றுமே இல்லை!

அவன் புனர் ஜன்மமெடுத்து முன் ஜன்மத்தின் சகல வஸ்துக்களையும் உதறி எறிந்து விட்டதைப் போலிருந்தது. அவனுடைய தேகம், மனம் இரண்டும் தங்களுக்குள்ளே சச்சரவிட்டுக் கொண்டு,

தனித்தனியா யிருந்தன. சாயங்காலமானதும், அவன் மனம் ஆற்றங்கரையின் அரச மரத்தடியிலோ அல்லது அக்கம்பக்க வயல்களில் உள்ள குடியானவர்களையோ சுற்றிக்கொண்டிருக்கும்; தேகமோ அப்பொழுது விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து, வண்டியிலே உல்லாச சவாரி செய்து கொண்டு காற்றுவாங்கும். மனம் கோவணத்தைக் கட்டிக்கொண்டு நதியில் குதித்து நீந்தும்போது, தேகம் அழகியதோர் ஆசனத்தில் அமர்ந்து, வேலைக்காரர்கள் சோப்பும் எண்ணெயும் தேய்த்து விடக் குளித்துக் கொண்டிருக்கும். இவ்விதம் ஒரே காசிநாதன் எப்பொழுதும் இரண்டிடங்களில் இரு வித வேலைகள் செய்து வந்தான். ஆனல், ஒரு வேலையும், அவனது உள்ளமும் உடலும் சேர்ந்த முழு ஜீவனுக்கும் அழகா யிருப்பதில்லை; பூர்த்தி யடைவதுமில்லை.

அநேக நாட்கள் இவ்விதமே சென்றன. ஒவ்வொன்ருகப் பனிரண்டு மாதங்கள் கழிந்தன. முதலில் சில மாதங்கள் கஷ்டமாயில்லை. புதிய ஆனந்தத்தில், புதுமோகத்தில், அவன் தனது நிலையைச் சரி தப்புப் பார்ப்பதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. ஆனல், அது கிடைத்தவுடன், நாளுக்கு நாள் வற்றத் தொடங்கினன். இந்த விஷயம் யாருக்கும் தெரியாது; ஆனல், கமலா அறிந்து கொண்டாள்.

அவளுடைய கண்கள் கணவனின் நிலையைக் கண்டுகொண்டன. ஒரு நாள் அவள், "நீங்கள் நாளுக்கு நாள் ஏன் இப்படி இளைத்துப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"யார் சொன்னது?"

"என் கண்களே சொல்லுகிறதே."

"உன் கண் பொய் சொல்லுகிறது."

அப்புறமும் அவள் விடவில்லை: "விஷயம் என்ன, என்னிடம் சொல்ல மாட்டீர்களா?" என்றாள்.

"ஒன்று மில்லையே, என்ன சொல்லுவேன்?"

"ஒன்றுமில்லையா? ஏதோ நடந்திருக்கிறது; மறைக்கிறீர்கள்."

"இல்லையே!"

"நிச்சயம் என்னவோ நடந்திருக்கிறது; என் மனதுக்கு எல்லாம் தெரியும்."

காசிநாதன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, "நீ ரொம்பத் தொந்தரவு செய்கிறாய். நான் போகிறேன்" என்றான்.

அவன் போகத் தொடங்கவும், கமலா அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள். வியாகூலத்துடன், "போகக்கூடாது—நான் இனி ஒன்றும் கேட்கவில்லை" என்றாள்.

காசிநாதன் உட்கார்ந்தான். ஆனால், அடுத்த கணமே மௌனமாய் எழுந்து போய் விட்டான். கமலாவும் அவனை மீண்டும் உட்காரச் சொல்லவில்லை. கணவன் சென்ற பிறகு, அவள் ஒரு கட்டிலில் சாய்ந்து, தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, தன்னந்தனியே அழ ஆரம்பித்தாள்.

வெளியில் சென்ற காசிநாதன் தன்னை எவரும் கவனிக்கவில்லை என்பதை நிச்சயப் படுத்திக் கொண்டு, மெள்ள மெள்ள வெளிக் கதவைத்

தாண்டி, வீதியில் இறங்கி நடந்தான். வெகுதூரம் சென்ற பிறகு, தனக்குப் பின்னுல் ஒரு தர்வான் வந்து கொண்டிருப்பதைக் கண்டான். காசிநாதன் மிகுந்த எரிச்சலுடன், "நீ எங்கே வருகிருய்?" என்று தர்வானைக் கேட்டான். அவன் சலாம் செய்து, "எஜமானேடு" என்ருன்.

"என்னேடு வரவேண்டியதில்லை—நீ திரும்பிப் போ."

"மாலை நேரத்தில் துணை எவருமின்றி எஜமான் தனியாகவா உலாத்துவீர்கள்?"

ஒரு பதிலும் அளிக்காமல் காசிநாதன் மேலே நடந்தான். பாவம்! தர்வான் என்ன செய்வான்? அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கடைசியாக, கொஞ்ச நேரம் நின்று தானுக யோசித்துப் பார்த்தான். "எஜமானேடுகூடப் போகத்தான் வேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு, தொடர்ந்து செல்லலானுன். காசிநாதன் இதைக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. தன் இஷ்டப்படி நடந்து, தனது மாமாவின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். உள்ளே சென்று, துக்கத்தோடு தாழ்வாரத்தில் உட்கார்ந்தான். வெகுநேரம் வரையிலும் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். வெளியே உலாவக் கிளம்பிய ஹரி பாபு இவனைக் கண்டார். ஆனுல், கொஞ்சம் இருட்டா யிருந்ததால் அவரால் இவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. கிட்ட வந்து, "யார்?" என்று கேட்டார்.

"நான் தான்," என்ருன் காசிநாதன்.

ஹரி பாபுவுக்கு ரொம்ப ஆச்சரியமா யிருந்தது. "ஹா! சின்ன எஜமானர்! இங்கே எப்படி வந்தீர்கள்?" என்றார்.

காசிநாதன் மௌனம் சாதித்தான். ஹரி பாபு உரத்த குரலில், "அம்மா, பார்! இங்கே பார்! ஜமீன்தார் வீட்டுச் சின்ன எஜமானர் வந்திருக்கிறார்—அவர் உட்காருவதற்கு யாரும் ஆசனம்கூடப் போடவில்லையே!" என்றார்.

ஹரியின் தாயார் ஓடிவந்தாள். "மகராஜனாயிரு, அப்பா! ஏழை மாமியின் நினைவு வந்ததா?" என்றாள்.

காசிநாதன் அப்பொழுதும் பேசாம லிருந்தான். பிறகு, மாமி தனது மகள் விந்து வாசினியைக் கூப்பிட்டு, "விந்து! ஜல்தியாக வா; பார், உன் காசி அண்ணா வந்திருக்கிறான். உட்காருவதற்கு ஏதாவது கொண்டுவா—அதற்குள் நான் சாயங்கால ஜபம் செய்துவிட்டு வருகிறேன்" என்றாள்.

விந்துவாசினி, மதுசூதன பட்டாசார்யாவின் கடைசிப் பெண். கட்டிக் கொடுத்ததற் கப்புறம் தாயார் வீட்டுக்கு அதிகமாக வருவதில்லை. இப்பொழுது அவள் வந்து ஒரு மாதம்தான் ஆகிறது. ஆனால், இதுவரையிலும் காசி அண்ணாவை அவள் பார்க்கவில்லை. காசி அண்ணாவிடம் அவள் அதிக அன்பு கொண்டிருந்தாள். ஆகையால், அண்ணாவின் பெயரைக் கேட்டதும், ஓட்டமாய் ஓடி வந்தாள். வந்து பார்க்கவே, காசி அண்ணாவைக் காணோம்—யாரோ ஒரு பாபு இருட்டிலே தாழ்வா

ரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிருர்! காசி அண்ணுவை இந்தக் கோலத்திலே அவள் ஒருபோதும் கண்டதில்லை! காசி அண்ணு இப்போது பெரிய மனிதர் வீட்டு மாப்பிள்ளையாகி யிருக்கிருர்; 'பாபு' ஆகி யிருக்கிருர். இதைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது. ஆனல், இருட்டில் உட்கார்ந்திருக்கும் அண்ணுவின் அருகில் சென்று அவரது ஏங்கிய முகத்தைக் கண்டதும், அவளுடைய சிரிப்பு பறந்து விட்டது.

காசிநாதனின் முகம் கறுத்திருப்பதை, விந்துவைத் தவிர வேறு யாரும் பார்க்கவில்லை. வீட்டிலேயே அவள் ஒருத்திதான் காசியின் மனதைக் கொஞ்சம் அறிந்திருந்தவள். காசியின் அருகில் வந்து, அவனது முதுகை நீவிக்கொண்டு, மிகுந்த அன்புடன், "காசி அண்ணு! இங்கே ஏன் தனியாக உட்கார்ந்திருக்கிருய்? வா, உள்ளே வந்து உட்கார். எழுந்திரு" என்ருள் விந்து. காசிநாதன் பேசாமல் எழுந்து வீட்டுக்குள் சென்று, கட்டிலின்மேல் உட்கார்ந்தான்.

"அண்ணு, நான் இங்கே வந்து எத்தனை நாளாகிறது! நீ ஒரு நாள்கூட என்னைப் பார்க்க வரவில்லை, பார்த்தாயா?" என்ருள் விந்து.

"வர முடியவில்லை"

"ஏன், ஏன் வர முடியவில்லை?"

காசிநாதன் கொஞ்சம் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, "என்னை அவர்கள் வர விடுவதில்லை" என்ருன்.

"வர விடுவதில்லையா! ஏன்?"

"எங்கே?"

"நாட்டுப் பெண்ணைப் பார்க்க."

விந்து புன்சிரிப்புடன், "எப்போது உனக்குச் சமயம் கிடைக்கிறதோ அப்போது வந்து கூட்டிப் போ" என்ருள்.

"நாளைக்கு வரட்டுமா?"

"நிச்சயமாய் வரவேண்டும்."

தான் சொன்னபடியே காசிநாதன் அடுத்த நாள் வண்டி கொண்டு வந்தான். விந்து நல்ல சேலையுடுத்தி, அலங்காரம் செய்துகொண்டு புறப் படுகிற சமயத்தில், எங்கிருந்தோ ஹரி பாபு வந்து சேர்ந்தார். அவர் வரும்போதே, வாசலில் வண்டி நிற்பதைப் பார்த்தார். அதிலிருந்து காசிநாதன் வந்திருப்பான் என்று அனுமானித்துக்கொண்டார். உள்ளே வந்ததும், தமது மனைவியிடம் சென்று, "விந்து எங்கே போகப் போகிருள்?" என்று கேட்டார்.

"நாட்டுப் பெண்ணைப் பார்க்கப் போகிருள்" என்று அவள் சொன்னுள்.

"எந்த நாட்டுப் பெண்ணை? ஜமீன்தாரின் மகளையா?"

மனைவி ஒன்றும் பதில் அளிக்கவில்லை.

ஹரி பாபு உக்கிரமாக, "விந்து அங்கே போவாளானல், நான் உயிருள்ள வரையிலும் அவள் முகத்தில் விழிக்க மாட்டேன்" என்ருர்.

மனைவி ஆச்சரியத்துடன், "ஏன்? தன் அண்ணுவின் சம்சாரத்தைத்தானே பார்க்கப்போகிருள். அதில் என்ன தப்பு" என்று கேட்டாள்.

காசிநாதன் எங்கேயோ ஞாபகமாக, "அப்படித்தான்" என்ருன்.

விந்து துக்கமடைந்து, "நீ போக விரும்பும் இடத்துக்கு உன்னை அவர்கள் போக விடுவதில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை, போக விடுவதில்லை. நான் எங்கேயாவது போனல் மாமனருக்கு அவமானமா யிருக்கிறதாம்."

அண்ணு சங்கடப்படுகிருன் என்று அறிந்துகொண்ட விந்து, பேச்சை மாற்றி, "அண்ணு, நீ நாட்டுப் பெண்ணைக் காட்டவில்லையே?" என்ருள்.

காசிநாதன் மௌனமாக இருந்தான்.

"நாட்டுப் பெண் எப்படி இருக்கிருள்?" என்று விந்து மீண்டும் கேட்டாள்.

"நன்ருயிருக்கிருள்."

"ஆனல் நான் ஒரு நாளைக்கு வந்து அவளைப் பார்த்துவிட்டு வரலாமா?"

காசிநாதன் தலையை உயர்த்தி, விந்துவின் முகத்தைப் பார்த்தான். பிறகு கொஞ்சம் சிரித்துவிட்டு, "பார்த்து வரலாம்" என்ருன்.

இதற்குள் வெளியில் வண்டி வரும் சத்தம் கேட்டது.

விந்து, "உனது வண்டி வந்துவிட்டது போலிருக்கிறது" என்ருள்.

"ஆம், அப்படித்தான் தோன்றுகிறது."

கொஞ்சநேரம் கழித்து, காசி, தான் திரும்பிப் போகிற சமயத்தில், விந்துவை நோக்கி, "எப்போது வருகிருய்?" என்று கேட்டான்.

"தப்போ, சரியோ. அதையெல்லாம் விளக்கிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. விந்து என் பேச்சைக் கேட்கா விட்டால், அவள் அப்புறம் இந்த வீட்டுக்குள் ஒருபோதும் வரக் கூடாது. அவ்வளவுதான்."

ஹரி பாபுவின் சுபாவம் விந்துவுக்குத் தெரியாததல்ல. அவள் வாய் பேசாமல் துணிமணி அலங்காரங்களை யெல்லாம் நீக்கிவிட்டாள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த காசிநாதன் வாய் திறக்க வில்லை. பேசாமல் வண்டியில் போய் உட்கார்ந்து கொண்டான்.

தனியாய் வீடு திரும்பிய கணவனைப் பார்த்த கமலா, "ஏன், நாத்தனர் வரவில்லையா?" என்று கேட்டாள்.

காசிநாதன் தீனமான குரலில், "அவர்கள் அனுப்பவில்லை" என்ருன்.

"ஏன்?"

"தெரியவில்லை; ஒருவேளை இங்கே அனுப்ப அவர்களுக்கு வெட்கமா யிருக்கலாம்."

இந்த வார்த்தைகள் கமலாவின் இதயத்தை 'சுரீல்' என்று துளைத்தது.

அத்தியாயம் 4

கமலா, ஜமீன்தார் பிரிய பாவுவின் ஏக புத்திரி. அவர் முதலில் இருவரை மணந்தார். ஆனல், அவ் விருவருக்கும் சந்தானமில்லே. இரண்டு மனேவிகளும் இறந்து போனர்கள். அந்தத் துக்கத்தோடு விருத் தாப்பிய தசையில், மூன்ருவது விவாகம் செய்து கொண்டார். அதன் பலன்தான் இந்த ஏக கன்யா ரத்தினம். புத்திர பாக்கியமே இல்லாதிருந்து குழந்தை பிறந்து விட்டபடியால், பெண், ஆண் என்று அவர் வித்தியாசமே பாராட்ட வில்லே. ஆகையால், வீட்டில் கமலா எஜமானருக்கு எஜ மானராகவும் எஜமானிக்கு எஜமானியாகவு மிருந் தாள். அவளுடைய பேச்சைத் தட்டவோ, அவள் இஷ்டத்துக்கு மாருக நடக்கவோ, யாருக்குமே துணிவு கிடையாது. கமலா பணக்காரி, படித்தவள், அழகி, குணவதி, சகல விஷயங்களிலும், அவள் தனி அரசு செலுத்தினள்.

இருந்தாலும், ஒரே ஒரு மனிதனேமட்டில் அவ ளால் வசப்படுத்த முடியவில்லே. அந்த மனிதன் வேறு யாருமல்ல; அவளுடைய கணவனை காசி நாதன்தான். கமலா எவ்வளவோ உபாயங்களே அனுஷ்டித்துப் பார்த்தாள்: கோபித்தாள்; துக் கித்தாள்; கொஞ்சினள்; கெஞ்சினள். பணிவிடை செய்தாள். ஆனல், எந்த விதத்திலும் புருஷனின் மனதை வசப்படுத்த அவளால் முடியவில்லே; துளிக்கூட முடியவில்லே. அவன் ஒரு ஏழை மனிதன்

தான். ஆனால், மனது ரொம்பவும் பண்பட்டது. இப்பேர்ப்பட்டவன் தனக்குக் கணவனாக வாய்த்திருப்பதை, அவள் எவ்விதத்தும் உணரமுடியவில்லை. "பகவானே! அவருடைய உள்ளத்தை எனக்குக் கொடு" என்று தினம் இருவேளையும் பிரார்த்தனை செய்து வந்தாள். "ஒரு வேளை அவருக்கு இருதயமே இல்லையோ? அதனால்தான் நான் அதை அடைய முடியவில்லையோ?" என்று சில சமயம் எண்ணுவாள். கமலாவுக்கு அவளுடைய கணவன் ஒரு புதிராயிருந்தான். நாட்கள் செல்லச் செல்ல, அவன் உள்ளத்தை எட்டிப் பிடிக்க அவள் நடந்த பாதையும் நீண்டு கொண்டே யிருந்தது; கஷ்டம் அதிகரித்தது. இவ்வளவு அபாரமான கணவனின் அன்பு வேறு ஒரு ஸ்திரீக்கும் கிடைக்காது என்று ஒரு கணம் எண்ணுவாள். ஆனால், அடுத்த விநாடியிலே, இவ்வளவு பயங்கரமான திரஸ்காரம் வேறு எந்தப் பெண்ணின் தலை விதியிலுமிருக்காது என்று தீர்மானிப்பாள். எப்படியோ கமலாவின் நாட்களும் கழியத் தொடங்கின. கழியாத தெல்லாம் காசிநாதனுக்குத் தான். அவனுக்குப் புஸ்தகம் படிப்பதிலே இப்போது மனம் லயிக்கவில்லை; சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பதிலும், ஆனந்தம் உண்டாகவில்லை; சம்பாஷணை, சிரிப்பு, விநோதங்களிலும் ரஸம் இல்லை. கொழு கொழு என்றிருந்த அவனது சரீரம் மெலிய ஆரம்பித்தது; சிவப்பு நிறம் கறுப்பாக மாறத் தொடங்கியது. கணவனின் தேகம் நாளுக்கு நாள் இப்படி மாறுவதைக் கண்ட கமலா, தலையில் அடித்துக் கொண்டாள். இந்த விஷயமாக ஒன்

றும் கேட்பதில்லை என்று முதலில் பிரதிக்ஞை செய்தாள். ஆனல், இந்தப் பிரதிக்ஞையைக் காப்பாற்ற முடியவில்லை. ஒரு நாள் புருஷன் வந்ததும், அவள் அவனுடைய காலில் விழுந்து அழத் தொடங்கினுள்.

"என்ன நடந்தது, ஏன் அழுகிருய்?"

கமலா ஒன்றும் பேசவில்லை. வெகு நேரம் வரையிலும் அழுதுவிட்டு மறுபடியும் அவனது பாதத்தின்மேல் தனது சிரசை வைத்துக்கொண்டு, "என்னை நீங்கள் அடியோடு கொன்று விடுங்கள். கொஞ்சங் கொஞ்சமாக இப்படி வதைக்காதீர்கள்" என்ருள்.

காசிநாதன் திடுக்கிட்டான். "விஷயம் என்ன, சொல்? நான் என்ன செய்தேன்?" என்ருன்

"செய்வது உங்களுக்குத் தெரியாதா?"

"எனக்கு ஒன்றும் தெரியவில்லையே?"

"இஷ்டம் போல் நடவுங்கள். ஆனல், நான் நிற்பதற்குத் துளி இடம் தாருங்கள். வேறு ஒன்றும் நான் கேட்கவில்லை."

கமலாவைக் காசிநாதன் வாரித் தூக்கி, அருகிலே உட்கார வைத்து, மிகுந்த அன்புடன், "என்ன நடந்தது? விளக்கமாகச் சொல்லு" என்ருன்.

"நீங்கள் ஏன் நாளுக்கு நாள் இப்படிப் போகிறீர்கள்?"

"எனது தேகம் ரொம்ப இளைத்து விட்டதா?"

கமலா கண்ணிலே முந்தானையை வைத்துக் கொண்டு அழுதபடியிருந்தாள். அந்த நிலையிலேயே தலையை அசைத்து, "ஆம், இளைத்துத்தான் விட்டீர்கள்" என்ருள்.

"அது எனக்கும் தெரியும். ஆனால், நான் என்ன செய்யட்டும், நீயே சொல்லு."

கமலா முகத்தை உயர்த்தி, "மருந்து சாப்பிடுங்கள்" என்றாள்.

காசிநாதன் சிரித்துக் கொண்டு, "மருந்தால் இது சௌக்கியமாகாது" என்றான்.

"பின்னே, எதால் ஆகும்?"

"தெரியாது."

"மருந்தால் குணப்படாது; பின் எதனால் குணப்படும் என்று கேட்டால், அதுவும் தெரியாது! அப்படியானால் என் கதி அதோகதிதானா?"

காசிநாதன் சமஸ்கிருதப் பள்ளிக்கூடத்தில் படித்த ஒரு சாதாரண மனிதன். அன்பு, காதல் இவற்றின் தன்மைகளைச் சற்றும் அறியாதவன். காதல் சம்பாஷணை புரிய அவனால் முடியாது. அப்படியிருந்தும் அவன்கூட இந்தச் சமயத்தில் இயற்கையான அன்பினால் தன்மயம் ஆகி, கமலாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, அவள் கண்ணைத் துடைத்துவிட்டு, "இங்கே எனக்குச் சுகம் கிடைப்பதில்லை—அதனால்தான் நான் இப்போது இளைக்கிறேனே என்னவோ" என்றான்.

"சுகம் கிடைக்கவில்லையானால், இங்கே ஏன் இருக்கிறீர்கள்?"

"இருக்காமல் வேறு எங்கே போவது?"

"இதைத் தவிர, வேறு எங்கும் உங்களுக்குப் புகல் இடமில்லையா? எங்கே ஆனந்தம் கிடைக்குமோ அங்கே போய் வசியுங்களேன்?"

"அது முடியாது."

"ஏன் முடியாது ?"

"இங்கே வசிக்க மாட்டேனென்ருல், மாமஞர் சம்மதிப்பாரா ?"

"ஆனல், நீங்கள் இவ்விதம் இளைத்து இளைத் துத் துரும்பாய்ப் போனல், அவருக்கு நன்ருயிருக் குமா ?"

"நன்ருயிருக்காது ; ஆனல் வழி என்ன ? உன் தகப்பஞர் ஒரு ஏழையைப் பார்த்து..........."

காசியின் முகத்திலே கையை வைத்து மூடிய கமலா, மேலே அவன் சொல்லப் போவதைத் தடுத் தாள் : "ஈசுவரா ! இப்படிப் பேசாதீர்கள். என் னிடம் எல்லாவற்றையும் சொல்லுங்கள். நான் ஏதாவது வழி தேடுகிறேன்" என்ருள்.

காசிநாதன் சற்று யோசித்த பின், "எல்லா விஷயத்தையும் உன்னிடம் சொல்ல முடியாது" என்ருன். பிறகு கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "இதையெல்லாம் பார்க்கையில் உனக்கும் எனக்கும் கலியாணம் ஆகாதிருந்தால் நன்ருயிருந்திருக்கும் என்று எனக்கு தோன்றுகி றது" என்ருன்.

"ஏன் ?"

"நீயே சொல்லு, என்னை அடைந்து நீ ஒரு நாளாவது சுகம் பெற்ருயா ? எனக்குப் பிரேமை யின் தன்மை தெரியாது ; அன்பும் ஆதரவும் தெரி யாது ; நல்லதொன்றுமே தெரியாது. இந்த வய திலே உனக்கு எத்தனை ஆசைகள், அபிலாஷைகள் இருக்கின்றனவோ ! அவைகளில் ஒன்ருவது என் ஞல் பூர்த்தியாயிற்ரு ? நான் உனது கணவன் அல்ல;

கணவனைப் போல் தோன்றும் ஒரு நிழலாகவே யிருக்கிறேன்.''

கமலாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே ஒரு வார்த்தை மட்டில் அவளுடைய இருதயத்தின் அடியிலிருந்து வெளிக் கிளம்புவதற்கு இதுவரையிலும் அலைமோதிக் கொண்டிருந்தது. காற்றே இல்லாத ஓர் அறையில் பலவந்தமாய் அமுக்கி வைக்கப்பட்ட ஒரு பூஞ்செடி போல் அது தத்தளித்துக் கொண்டிருந்தது. "என்னிடம் நீங்கள் கொஞ்சம் கண்ணிரங்க முடியாதா ?'' என்றாள் நடுங்கிக் கொண்டே.

"இதை வேறு எப்போதாவது சொல்லுகிறேன்.''

"சொல்ல வேண்டாம்—என்னைக் கல்யாணம் செய்துகொண்டு நீங்கள் சுகமடையவில்லையா ?''

"எனக் கொன்றும் தெரியவில்லை. அப்படித் தானோ என்னவோ ?''

"ஆனால் வேறு யாரையாவது விவாகம் செய்து கொண்டிருந்தால், சுகமடைந்திருப்பீர்களா ?''

"அதையும் நிச்சயமாகச் சொல்லமுடியாது.''

இதைக் கேட்டுக் கமலாவின் தேகம் முழுதும் எரியத் தொடங்கியது. இந்தச் சமயம் வேலைக்காரி வந்து, "அம்மாவுக்குப் பலமாகக் காய்ச்சல் வந்திருக்கிறது—அவர்கள் உங்களைக் கூப்பிடுகிறார்கள்'' என்றாள்.

கமலா கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியில் போய் விட்டாள்.

அத்தியாயம் 5

கமலாவின் தாயாருக்கு நோய் குணமடையவில்லை. பதினைந்து நாள் அவதிப்பட்டு, கடைசியில் எல்லோரையும் கதறவிட்டு, அவள் இந்த உலகத்திலிருந்து சென்றுவிட்டாள். மனைவியிறந்த சோகத்தால், பிரிய பாபுவுக்கு அளவிலாத துக்கம் ஏற்பட்டது. இந்தக் கிழ வயதில் தாம் இனி அதிக நாள் ஜீவியவந்தராய் இருக்கமுடியாது என்று அவருக்குத் தோன்றியது. இப்பொழுது வீட்டு வேலை எல்லாம் கமலா தலையில் விழுந்தது. உலகத்திலே தனது சுகத்தைத் தேடுவதைவிட, ஒரு மனிதன் அல்லது ஸ்திரீ செய்ய வேண்டிய கடமைகள் வேறு எவ்வளவோ இருக்கின்றன. வயோதிகத் தந்தை ரொம்பப் பலவீன மடைந்து கொண்டிருந்தார். ஆகையால், இப்பொழுது கமலா அவரருகிலே இருக்கத் தொடங்கினாள். ஆனால், காசிநாதனோ? அவன் இந்த உலகத்துக்கு வெகு தூரத்தி லிருந்தான்! சமயம் கிடைத்தபோதெல்லாம், புஸ்தக மூட்டையை எடுத்துக்கொண்டு, தன் அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டு படிக்க உட்கார்ந்து விடுவான். புஸ்தகத்திலிருந்து மனம் விடுபடும்போது வெளிக்காற்று வாங்கப் போவான். சில சமயங்களில், இரண்டொரு நாள் வரையிலும் வீட்டுக்கு வருவதில்லை. எங்கே சாப்பிடுகிறானோ, எங்கே உறங்குகிறானோ—எவருக்கும் ஒன்றும் தெரியாது. இதை யெல்லாம் கண்டு கமலா மனம் சோர்ந்து

குச் சேவை செய்வது, வேலைக்கார வேலைக்காரிகளை மேற்பார்வை பார்த்துக்கொள்வது—இந்தக் கர்ம சுகத்திலேயே அவளுடைய நாட்கள் கழிந்து கொண்டிருந்தன. ஆனால், ஒருவருக்கு ஒன்றில் கிடைக்கும் சுகம் மற்றவருக்குக் கிடைப்பதில்லை. கமலா அனுபவித்துக் கொண்டிருந்த சுகத்தில், கிழ வேலைக்காரி துக்கமடைந்தாள். ரொம்ப நிதானித்துப் பார்த்து, கடைசியாக ஒருநாள் தனியே பிரிய பாபுவைக் கண்டு, "சின்ன எஜமானர் ஏனோ இப்படி இருக்கிறாரே! வீட்டில் தங்குவது கூட இல்லை. அடிக்கடி வெளியே போய் விடுகிறார். எங்கே போகிறார், என்ன செய்கிறார் என்று, வீட்டில் உள்ளவர்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. தங்கள் மகளிடத்தில்கூடப் பேசுவதில்லை போலிருக்கிறது" என்றாள்.

பிரிய பாபு தேக அசௌக்கியத்தினால் பெரிதும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆகையால், இதெல்லாம் அவருக்குத் தெரியாது. கிழவியின் வார்த்தைகள் அவரது மனதிலே கிளர்ச்சி உண்டுபண்ணிவிட்டது. கமலா வந்ததும், அவர் மிகுந்த அன்புடன், "அம்மா, நான் கேட்கும் சில கேள்விகளுக்குச் சரியாய்ப் பதில் சொல்லுவாயா?" என்றார்.

தந்தையின் முகத்தைக் கமலா உற்றுப் பார்த்த வண்ணம், "என்ன விஷயம், அப்பா?" என்றாள்.

"இங்கே பார், என்னிடம் நீ வெட்கப்பட வேண்டியதில்லை. உன் மனக் குறைகளைத் தகப்பனிடம் எதற்காக ஒளிக்க வேண்டும்? உன் துயரங்

போனுள். யுவதியா யிருந்தால் கூட, அவள் இன்னும் ஒரு சின்னஞ்சிறு சிறுமி போலத்தான் இருந்தாள். கணவன் மீது அன்பும் பக்தியும் கொள்ளுவதென்றுல் என்ன? அதை இதுவரையிலும் அவள் அறிந்திருக்கவில்லை. தன் வாழ்விலே ஒரு விக்னம் நேர்ந்து விட்டது, அதுவும் புருஷனுல்தான் என்று மட்டும் அவளுக்குத் தோன்றிற்று. இதிலே அவள் பேரில் என்ன குற்றம்? கற்றிருந்த கல்வியையும் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கத் தொடங்கினுள். அவள் இருதயத்திலே அமுங்கிக் கிடந்த பொன் அலைகள் வீசத் தலைப்படவில்லை. வெளி அழகுகள் உள்ளத்திலே பிரதிபிம்பிக்காமல், அசட்டையாலும் அசிரத்தையாலும் அழியத் தொடங்கின. இறுதியாக, அது எப்போது அறவே அழிந்தது என்பது கமலாவுக்கே தெரியாது. கடைசியிலே, ஒரு இடிந்த கட்டிடத்தின் இரண்டு மூன்று செங்கல்லும், நாலைந்து கம்புகளும் கற்களும் இங்குமங்கும் சிதறிக் கிடப்பதைத் தான் தன் உள்ளக் கோயிலிலே அவள் கண்டாள். ஆனுல், அவைகளெல்லாவற்றையும் சேர்த்து இணைத்து மறுபடியும் ஒரு கூரையாக்குவதற்கு அவளுக்கு விருப்பமில்லை; சாமர்த்தியமும் போதாது. இங்கே ஒரு காலத்தில் ஒரு அரண்மனை இருந்தது; உல்லாச மாளிகை யிருந்தது. கனவின் மயக்கத்தில் அது வந்தது; கனவு கலைந்தபின் அது போய்விட்டது. இனியும் அந்த ஸ்வப்பனத்தைக் காணுவோம் என்ற விருப்பம் கூட அவளுக்கு இல்லை. போனது போனதுதான். கிழத் தந்தைக்

களை என்னிடம் உள்ளது உள்ளபடி சொல்லு. அனைத்தையும் தீர்த்து வைக்கிறேன்."

கமலா மௌனமாக இருந்தாள். பிரிய பாபு மறுபடியும், "நீ சுகமா யிருக்க வேண்டுமென்று தான் உன்னை யோக்கியதையுள்ள புருஷனிடம் ஒப்படைத்திருக்கிறேன். கமலா! உன்னைத் தவிர, வேறு யாரிடமும் எதனிடமும் எனக்குப் பாச மில்லை. நீ துக்கமடைவதைப் பார்த்துக்கொண்டே நான் இறந்தால், என் நெஞ்சு வேகாது" என்றார். கிழத் தந்தையின் கண்களில் நீர் வழிந்தது. கமலாவும் கண்ணீர் வடித்தாள். தந்தை, கமலா வின் கண்ணீரைத் துடைத்து விட்டு, அத்யந்த வாஞ்சையுடன், "உன் மனத்துயரை உள்ளபடி சொல்ல மாட்டாயா?" என்று கேட்டார்.

ஆனால், என்ன சொல்வது என்று கமலாவுக்கு ஒன்றுமே தெரியவில்லை. பாபு சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, மறுபடியும், "உனக்கும் அவருக்கும் ஏதாவது சச்சரவு நடந்ததா?" என்றார்.

கமலா மனதுக்குள்ளாக, "எப்பொழுது ஒற்றுமையா யிருந்தோம், சண்டை உண்டாவ தற்கு!" என்று சொல்லிக் கொண்டாள். தலையை அசைத்து, "இல்லை" என்றாள்.

"சண்டை நடக்கவில்லை யென்றால், பின்னே அவரிடம் நீ பிரியமாய் நடப்பதில்லையா?"

சொல்லி விடலாமா என்று ஒருகணம் கமலா வின் உள்ளம் படபடத்தது. அவளால் முடிய வில்லை. கணவனை அவள் களிப்பிக்க முடியவில்லை. ஆனால் அதைச் சொல்வதற்கு அவள் தயாராக

இல்லை. அதனால் தந்தையின் மனம் புண்படும் என்று அவளுக்குத் தோன்றியது. அவள் பேசாமலிருந்தாள். பிரிய பாபு, சோர்ந்த முகத்துடன் சிரித்துக்கொண்டு, "ஆனால், அவர்தான் உன்னிடம் பிரியமா யில்லையோ?" என்று கேட்டார்.

கமலா யோசிக்கத் தொடங்கினாள்:

"என்னை அவர்தான் சந்தோஷமுறச் செய்யாதிருக்க வேண்டும். ஆனால், அது எப்படி? என்னை எனது கணவர் திருப்திப் படுத்துவதில்லையா?" என்று, நடுங்கிக்கொண்டே, தனது இதயத்தைத் தானே ஊடுருவிப் பார்க்க முயன்றாள். ஆனால், அதன் ஆதங்கமெல்லாம் அடங்கிப்போயிருக்கக் கண்டாள். கண்ணீர் வழியும் கண்களை முந்தானையால் மறைத்துக் கொண்டாள்.

பிரிய பாபு மிகுந்த மனக்குழைவுடன், "அழாதே, அம்மா" என்றார்.

"அப்பா! என்னைப்போல் துர்ப்பாக்கியவதி யாருமே யில்லை."

பிரிய பாபு மெதுவாக மகளைத் தம் அருகே அணைத்துக் கொண்டார். மெள்ள மெள்ள ரொம்பக் கோமளமான குரலில், "கமலா! இம்மாதிரி எங்காவது சொல்லுவார்களா! என் மனங் கோணாமல் நடந்த உத்தம மனைவியின் மகள் நீ. இன்னமும் தினம் இரவு நேரத்தில் அவள் எனது பாதத்தருகில் வந்து உட்கார்ந்து கொள்ளுகிறாள். உங்களுக்குப் பயந்துகொண்டுதான் பகலில் வருவதில்லை. மாலையாகிவிட்டது. அவள் வந்து உனது பேச்சைக்

கேட்டாளானுல், ரொம்பத் துக்கமடைவாள்” என்ருர்.

அறையில் இருள் பரவிக்கொண்டிருந்தது. கமலா திடுக்கிட்டு, வாஸ்தவத்திலே யாராவது அறைக்குள் வந்திருக்கிருர்களோ என்று பார்த்தாள்! எங்கும் யாரும் இல்லாதிருப்பதைக் கண்டு, பயந்தெளிந்தாள். வெளியில் வந்ததும் அவளுடைய கால்கள் நடுங்கின. பாதி ரத்தத்தை யாரோ உறிஞ்சி விட்டதுபோல, தேகம் துர்ப்பலமாய் இருந்தது. அவள் தன் வேலை வெட்டிகளை யெல்லாம் முடித்தபிறகு, காசிநாதனின் அறைக்குள் சென்று உட்கார்ந்தாள். அங்கே அவன் தரையில் ஆசனம் விரித்து விளக்கேற்றிப் புஸ்தகத்தைத் திறந்து கொண்டு உட்கார்ந்திருந்தான்.

காசிநாதன் தலையை உயர்த்தி ஆச்சரியத்துடன், “கமலா! நீ வந்திருக்கிருயா?” என்ருன்.

“உம், நான் வந்திருக்கிறேன்.”

“உட்கார்” என்று சொல்லி விட்டு, மறுபடியும் அவன் படிப்பிலே முனைந்தான். கமலா வெகு நேரம் வரையிலும் கணவன் படிப்பதையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்கப்புறம் தனது கையால் அவனது புஸ்தகத்தை மூடிவிட்டாள்.

காசிநாதன் ஆச்சர்யத்துடன் முகத்தை நிமிர்த்தி, “மூடிவிட்டாயே” என்ருன்.

“கொஞ்சம் பேசுங்கள், தினம் படிக்கிறீர்கள்; ஒரு நாளைக்குப் படிக்கா விட்டால், ஒன்றும் கெட்டுப் போகாது.”

“இதற்காகவா புஸ்தகத்தை மூடிவிட்டாய்!”

"இதற்காக மட்டுமல்ல; நீங்கள் கோபமடைய மாட்டீர்களா, ஏதாவது சொல்லமாட்டீர்களா என்று எண்ணியுந்தான்."

காசிநாதன் புன்சிரிப்புடன், "எதற்குக் கோப மடைவது, கமலா? உன்னிடத்தில் எப்பொழுதாவது அப்படி நான் கோபித்திருக்கிறேனா? நீ பேசுவதில்லை, கிட்ட வருவதில்லை; பின்னே படிக்காமல் பொழுதை எப்படி நான் கழிப்பது?" என்றான். பிறகு கொஞ்சம் சிரித்து விட்டு, "எனக்கு ஜுரம்; இரண்டு நாளாக ஒன்றும் சாப்பிடவில்லை. ஆனால் நீ ஏனென்றே கேட்கவில்லை!" என்றான்.

கமலா நிமிர்ந்து பார்த்தாள்—கணவனின் முகம் வாடிப்போயிருந்தது. நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்; மிகவும் சூடாக இருந்தது. அவள் கண்ணீர் பெருக்கிய வண்ணம், கணவனின் மடியில் விழுந்து விட்டாள். வெட்கத்தால் இறந்து விடலாமா என்றுகூட தோன்றியது. அழுது கொண்டே, "எனது குற்றத்தை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய சகல பொறுப்புக்களையும் என்னிடமே விட்டுவிடுங்கள்" என்றாள்.

"என்னால் விட முடியும்; உன்னால் வகிக்க முடியுமா?"

"ஏன் முடியாது?"

"பார்ப்போம்."

"என்னை ஆதரித்து, அபிமானியுங்கள்."

"வெகுநாளைக்கு முன்பே ஆதரித்து அபிமானித்து விட்டேன். ஆனால், அதை உன்னால்

அறிந்துகொள்ள முடியவில்லை. இப்பொழுதும் கூடச் சரியாக அறிந்துகொள்ள மாட்டாய்."

விளக்கின் ஒளியிலே அந்த முகத்தைக் கமலா தன் ஆசைதீரப் பார்த்தாள். 'அம் முகத்திலே நீறுபூத்த நெருப்பு இருக்கிறது; தேனடையில் மறைந்த மது இருக்கிறது' என்று எண்ணினாள். க்ஷணநேரம் தன்னை அவள் மறந்து விட்டாள். மிகுந்த ஆவேசத்துடன், "ஏன் நீங்கள் இத்தனை நாள் வரையிலும் உங்களை நான் அறிந்துகொள்ள விடவில்லை? இத்தனை நாளும் உங்கள் மனதை ஏன் ஒளித்து வைத்துக்கொண்டு என்னை இப்படிச் சீரழித்தீர்கள்?" என்றாள். ஆனந்தத்தால் கணவனை மார்புறத் தழுவிக் கொண்டாள். காசிநாதனுக்குக் கூட அன்று கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

அத்தியாயம் 6

அடுத்த நாள் காசிநாதனைப் பிரிய பாபு வர வழைத்து, "அப்பா! என் காலம் ஆகிவிட்டது. எப்பொழுது வேண்டுமானாலும் போய்விடுவேன். வேறெபிள்ளை குட்டிகள் எனக்குக் கிடையாது. நான் வைத்துப் போகும் சொத்தெல்லாம் உனக்குத் தான். ஆகையால், நான் இருக்கிறபோதே, எல்லா ஆஸ்தியையும் அறிந்துகொள். இல்லாவிட்டால் ஒன்றையும் காப்பாற்ற முடியாது; ஜனங்கள் ஏமாற்றி விடுவார்கள்" என்ருர்.

காசிநாதன் தலையைக் குனிந்துகொண்டு, 'சரி; அப்படியே செய்கிறேன்" என்ருன்.

"அவ்வளவுதான், நாளையிலிருந்து தினம் கச் சேரிக்குப் போய்வா" என்ருர் பிரிய பாபு.

"சரி" என்று சொல்லிவிட்டு, காசிநாதன் அகன்ருன்.

பிரிய பாபு பெண்ணை அழைத்து, "மகளே! எனக்கோ வயதாகி விட்டது. இனி வேலைவெட்டி ஒன்றையும் கவனிக்க முடியாது. ஆகையால், காசிநாதனிடம் ஜமீன் பொறுப்புகளை யெல்லாம் ஒப்படைத்து விட்டேன். அப்புறம் ஏதும் சிக்கல் ஏற்படாதிருப்பதற்காக, இன்னின்னதை இப் படிச் செய்யவேண்டும் என்று அவனுக்கு அவ் வப்பொழுது சொல்லிக் கொடுத்து வருவேன்" என்ருர்.

வெகு நாள் வரையிலும் காசிநாதனுடன் தாமும் கச்சேரிக்குச் சென்று, ஜமீன் விஷயமான பல விஷயங்களையும் அவனுக்குப் பிரிய பாபு சொல்லிக் கொடுத்தார். அவனுக்கும் ஒரு வேலை கிடைக்கவே அதிக சந்தோஷ மடைந்தான். வீட்டுக்குள்ளே மூண்டு கொண்டிருந்த நெருப்பு வெகு நாளைக்கப்புறம் மெள்ள மெள்ளக் குறையத் தொடங்கியது.

காசிநாதன் இப்பொழுது ஒழுங்காக ஜமீன் காரியங்களைப் பார்த்து வருகிறான். கமலா ஒழுங்காகக் குடும்பத்தைக் கவனித்து வருகிறாள். பிரிய பாபுவும் ஒழுங்காகப் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கிறார். இவ்விதம் குடும்பம் சாந்தமாக நடந்து கொண்டிருந்தது.

ஆனால், கொஞ்ச நாளைக்கப்புறம் பிரிய பாபுவின் உடம்பு மிகவும் மோசமான ஸ்திதியை அடையத் தொடங்கியது. அவர் ஒரு நாள் கமலாவை அழைத்து, "நான் ஒரு உயில் எழுதி வைத்திருக்கிறேன்" என்று சொல்லி, தலையணைக் கடியிலிருந்து ஒரு பத்திரத்தை எடுத்துப் படிக்கலானார்: "நான் எனது ஸ்தாவர ஜங்கம சொத்து முழுவதிலும் பாதிப் பாகம் எனது மருமகன் காசிநாதனுக்கும் மீதிப் பாதியை எனது குமாரி கமலா தேவிக்கும் கொடுத்துப் போகிறேன்—ஏன் அம்மா! சரியா?" என்றார்.

கமலா ஒரு பதிலும் அளிக்கவில்லை. பிரிய பாபு ஆச்சரியமடைந்து, "ஏன் அம்மா! உனக்குப் பிடிக்க வில்லையா?" என்றார்.

அவர் இந்த உயில் எழுதியதே கமலாவை சந்தோஷப் படுத்த வேண்டும் என்றுதான். சொத்துப் பூராவும் காசிநாதன் பேரிலிருந்தாலே கமலா சந்தோஷமடைவாள் என்று அவர் எண்ணினர். ஆனல், கமலா யோசித்துக் கொண்டிருந்ததைச் சொல்ல வெட்கப்பட்டாள். பிரிய பாபு, "ஏதாவது சொல்லணுமா, அம்மா?" என்று மறுபடியும் கேட்டார்.

கமலா தலையை அசைத்து, "ஆம்" என்ருள்.

"என்ன, அம்மா?"

கமலா சற்று இங்குமங்கும் பார்த்துவிட்டு, "எல்லா சொத்துக்களையும் என் பேருக்கே எழுதி விடுங்கள்" என்ருள்.

"அதேன் இப்படிக் கேட்கிருய்?"

கமலா முகத்தைத் தொங்கவிட்டு உட்கார்ந்து கொண்டாள்.

பிரிய பாபு பழைய காலத்து மனிதராஞலும், அவரும் தற்காலத்திய சங்கதிகளை எல்லாம் கண்டும் கேட்டும் இருக்கிருர். கமலாவின் மனதிலுள்ள எண்ணத்தை அவர் அறிந்துகொண்டார். அவள் பேசிய எல்லா வார்த்தைகளையும், ஒவ்வொரு வார்த்தையாக அர்த்தம் பிரித்துக் கூட்டி அவளுடைய மனதின் ரகஸ்யத்தை அறியத் தொடங்கவும், கொஞ்சம் கொஞ்சமாக அவருக்குக் களைப்பு மேலிட்டது. உட்காருவதற்கு ஆதரவாக வைத்துக் கொண்டிருந்த தலையணையின் மேலே தலை வைத்து, அவர் கண்ணை மூடிப் படுத்துக்கொண்டார்.

வெகு நேரம் வரையிலும் மௌனமாக இருந்து விட்டு, "நீ எனது ஒரே மகள்; உன் மனசு துக்க மடைய நான் விரும்பவில்லை. எல்லா சொத்துக் களையும் உனக்கே கொடுத்துவிட்டுப் போகிறேன். ஆனால், அது அவ்வளவு நன்றாயில்லை. இருந்தாலும், நான் ஆசீர்வாதம் செய்கிறேன்: நீ சுகமா யிருக்க வேண்டும். இதில் எனக் கென்னவோ நம்பிக்கை யில்லை. என் ஆயுள் காலத்தில் எத்தனையோ நிகழ்ச்சி களை நான் கண்டும் கேட்டும் இருக்கிறேன். நானே மூன்று தரம் விவாகம் செய்துகொண்டிருக்கிறேன். உன்மாதிரி மனதுடைய பெண் உலகத்திலே ஒரு போதும் சுகமடைய முடியாது" என்றார். பிறகு கொஞ்ச நேரம் சும்மா இருந்துவிட்டு மறுபடியும் சொல்லலானார்: "பார்ப்போருக்கு நன்றாயிருக்கும், நீயும் சந்தோஷமடைவாய் என்று நினைத்தே, இரண்டு பேருக்கும் பாதி பாதியாக என் சொத்தை நான் எழுதி வைத்தேன். அவன் வேறே, நீ வேறே அல்ல என்று எண்ணினேன். சரி, இதை நீதான் சொல்லு: அவனுக்குக் கொடுப்பதை நீ ஏன் தடுக் கிறாய்?"

துக்கம் தொண்டையை அடைக்க, 'சொத்துக் கிடைத்து விட்டால், என்னை யாரும் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள்" என்று சொன்னாள் கமலா.

"சொத்துக் கிடைக்கா விட்டால்?"

"அவர் என் கைக்குள் இருப்பார்"

"எனக்குக் காசிநாதனைத் தெரியும்; நீ அவனை அறிந்துகொள்ளவில்லை. அவன் தன் தந்தையைப் போல் இருக்கிறான். காசிநாதன் உன்னைத் திரும்

பியும் பார்க்காதவனு யிருந்தால், சொத்து கிடைத்தாலும் பார்க்கமாட்டான்; சொத்து கிடைக்காமல் போனாலும் பார்க்கமாட்டான். கேளு அம்மா! இவ்விதமா புருஷனை வசப்படுத்துவது? பலாத்காரத்தினுல் காட்டுச் சிங்கத்தை வேண்டுமானுல், வசப்படுத்தி விடலாம்; ஆனுல், ஒரு சின்னஞ் சிறிய புஷ்பத்தை மலரச் செய்யமுடியாது" என்ருர் பிரிய பாபு.

சிறிது நேரம் பேசாம லிருந்துவிட்டு, பிரிய பாபு தொடர்ந்து கூறினுர்: "நீ வெற்றி யடைய வேண்டு மென்று பகவானிடம் பிரார்த்திக்கிறேன். ஆனுல், இது சிறந்த வழியல்ல. அவன் தானுக உன் வசமாகாவிட்டால், உன் அருகில் இருந்தும் தான் என்ன பலன்? அவனுக்குப் பாதி சொத்து தகாதா? இன்னும் ஒரு விஷயம்: மனம், வாக்கு, காயம், இகம், பரம் எல்லாவற்றையுமே கணவனுக்கு ஒப்புவித்தாகிவிட்டது. தன்னுடைய சர்வத்தையும் ஒப்புக்கொடுக்கப் பெற்றவனுக்கு, தனது சொத்தில் பாதியைக் கொடுக்க முடியாதா, கமலா? இம்மாதிரி செய்யாதே, மகளே! எப்பொழுதாவது இது அவனுக்குத் தெரிந்தால், அவன் ரொம்பத் துக்கமடைவான்."

கமலா ஒன்றும் பேசவில்லை; பிரிய பாபுவும் ஒன்றும் கேட்கவில்லை. இரண்டு பேரும் குறைந்தது அரை மணி நேரம் மௌனமாகவே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. வேலைக்காரி அறையில் விளக்

கேற்றி வைத்தாள். கமலா கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து போய் விட்டாள்.

அடுத்த நாள் பிரிய பாபு வக்கீலை அழைத்து, "எனது உயிலை மாற்றுகிறேன்" என்றார்.

"என்ன மாற்ற வேண்டும்?" என்று வக்கீல் கேட்டார்.

"மருமகனின் பெயரை அடித்துவிட்டு, எல்லா சொத்துக்களையும் பெண்ணுக்கே கொடுக்க விரும்பு கிறேன்."

"ஏன்?"

"இது அனாவசியமான கேள்வி. சொல்கிறபடி எழுதிக் கொடுங்கள்."

புதிய உயில் எழுதி முடிந்தது.

அத்தியாயம் 7

பிரிய பாபு இறந்து, சிராத்தம் சம்பிரமமாக முடிந்த பிறகு, உயிலைப் பார்த்து, காசிநாதன் துளியாவது கவலையோ ஆச்சரியமோ அடைய வில்லை. உலகத்திலே சகஜமாக எது நடந்து வருகிறதோ, எது நடக்க வேண்டுமோ அதுதான் நடந்திருக்கிறது ; இதில் துக்கப் படவோ திடுக்கிடவோ என்ன இருக்கிறது ?

ஆனாலும், காசிநாதனிடம் தனிமையில் திவான் சாஹேப், "சின்ன எஜமானரே! பாபு சாஹேப் இப்படி உயில் எழுதி வைத்துப் போவா ரென்று நான் கனவில் கூட நினைக்க வில்லை. முதலில் வேறோர் உயில் எழுதி யிருந்தார். அதில் தங்களுக்கும் தமது மகளுக்கும் சரிசமமாகத் தம் சொத்தைப் பகிர்ந்து கொடுத்திருந்தார். அதை ஏன் மாற்றினர் ? யாருடைய போதனையால் அவரது எண்ணம் இப்படி மாறி விட்டது ? ஒன்றும் தெரிய வில்லையே !" என்றார்.

காசிநாதன் புன்சிரிப்புடன், "தெரிய வேண்டிய அவசியம் என்ன ? சொத்து கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைத்து விட்டது. இதில் உமக்கும் எனக்கும் என்ன மனஸ்தாபம் ?" என்றான்

திவான் கொஞ்சம் வருத்தத்துடன், "ஆனாலும் ஆனாலும்—" என்றார்.

"ஆனாலும் கீனாலும் என்பதற்கெல்லாம் இதில் இடமே யில்லை. வாஸ்தவத்தில் பார்க்கப் போனால்,

இந்த சொத்தில் எனக்கு என்ன உரிமை யிருக்கிறது? அவர் இதில் எனக்குப் பாதி கொடுக்கப் போனதுதான் ஆச்சரியம். மேலும், எனக்குப் பாதி கொடுத்துப் போவதும் அவளுக்குப் பூராவுமே கொடுத்துப் போவதும்—இரண்டுமே ஒன்று தான். வித்தியாச மென்ன?'' என்றான்.

திவான் இன்னும் வருத்தமாய்த்தான் இருந்தார். வாடிய முகத்துடன், "இல்லை, இல்லை; வித்தியாசம் ஒன்று மில்லை—நான் பாபு சாஹேப்பின் போக்கைப் பற்றியே சொல்ல வந்தேன். அவருடைய அசல் அபிப்பிராயம் எனக்கு நன்றாய்த் தெரியும். அதனால் தான் இந்த விஷயத்தைச் சொன்னேன்'' என்றார்.

"அவர் தமது கடமையைச் செய்திருக்கிறார். கொஞ்சம் யோசியுங்கள்: மனைவிக்குக் கணவனைத் தவிர, வேறு ஒரு கதியுமில்லை; ஆனால் கணவனுக்கு வேறு கதி இருக்கலாம். நானோ ஏழை; ஒரே யடியாக இத்தனை சொத்தையும் அடைந்து விட்டால், கெட்டவனாகி விடவும்கூடும். ஒரு வேளை அந்தப் பயத்தினால் தான் உயிலை அவர் மாற்றி யிருப்பார்'' என்றான் காசி.

கிழத் திவான் எப்பொழுதும் காசிநாதனை வெறும் முட்டாள் பண்டிதனாகத்தான் எண்ணி யிருந்தார். அவன் வாயிலிருந்து இன்று இம்மாதிரி புத்திசாலித்தனமான பேச்சைக் கேட்ட பிறகு, அவனை வாழ்த்துவதைத் தவிர, அவருக்கு வேறு வழி யில்லை. இவ்விதம் வயோதிகத் திவான் கொஞ்சம் கொஞ்சமாகக் காசிநாதனின் அறிவை

அறியத் தொடங்கினர். ஆனல், கமலா அதற்கு மாருக, கொஞ்சம் கொஞ்சமாக அவனை யறிய முடியாத அறியாமையில் மூழ்கத் தொடங்கினள். தினம் நூறு தடவை, "இவர் எப்பேர்ப்பட்ட மனிதர்?" என்று அவள் தன்னைத் தானே கேட்டுக் கொள்வாள். ஆனல், அந்த நூறு கேள்விகளும் பிரயோஜன மற்று, முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அவளிடமே திரும்பி வந்து, "தெரிய வில்லையே!" என்று சொல்லும்.

கமலா எவ்வளவோ யோசித்தும், இந்த மனிதன் எதைச் சாதிப்பதற்காகப் படைக்கப்பட்டான் என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. அவன் மனசைத் தன் சரீரத்துக்குள்ளேதான் வைத்திருக்கிருனு அல்லது அதை வேறு எங்கேயாவது அடகு வைத்திருக்கிருனு? மற்றவர்களைப் போலத்தான் அவளுடைய கணவனும் கூட இருக்கிருன்; உண்கிருன், உறங்குகிருன், ஜமீன் காரியங்களைக் கவனிக்கிருன், வீட்டுமேல்பார்வை அனைத்தும் செய்கிருன். எல்லா விஷயங்களிலும் மகிழ்ச்சி யடைகிருன்; எல்லா விஷயங்களிலும் உதாசீனமாகவு மிருக்கிருன்! தன் கணவனுக்கு என்ன தான் பிடிக்கிறது, எந்தப் பொருளின்மேல் அவனுக்கு அதிக விருப்பம் என்பதை அவள் இதுவரையிலும் அறிந்துகொள்ள முடியவில்லை. கமலா எப்பொழுதாவது நோயுற்ருல், காசிநாதன் அவளருகே உட்கார்ந்து கண் விழித்துக் கொண்டிருக்கிருன்—அவனுடைய முகத்திலேதான் இவ்வளவு கடின மிருந்தாலும் இதயத்திலோ அன்பும் காதலும் வெடித்து

வெளிக் கிளம்புவது போலப் பெருகுகின்றன. ஆனால், நோய் குணமடைந்து அங்குமிங்கும் உலாவத் தொடங்கியபின், அவள் எதிர்ப்பட்டால்கூட அவளை அவன் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை; தனது வேலையிலேயே முற்றிலும் அவன் ஈடுபட்டு விடுகிறான். கோபத்திலே இரண்டு நாள் கமலா பேசாமலும் இருந்து பார்த்தாள்; ஆனால் பலன் ஒன்றுமில்லை. காசிநாதன் அருகில் வந்தான்; மறுபடியும் திரும்பிப் போய்விட்டான். வேண்டவில்லை, அழவில்லை, பேசவுமில்லை. மீண்டும் கமலா பேசத் தொடங்கினால் முன்போலவே புன்சிரிப்புடன் சந்தோஷமாகப் பேசுகிறான். ஒருபோதும் கோபம் காண்பித்ததில்லை. ஏன் இரண்டு நாள் பேசாதிருந்தாய், ஏன் கோபமாக இருந்தாய் என்றும் அவளை அவன் ஒரு நாளும் கேட்டதில்லை. கொஞ்ச நாளைக் கப்புறம் கமலா தன் மனதுக்குள்ளாகவே ஒரு முடிவுக்கு வந்தாள். தன்னை உதாசீனம் செய்யும் கணவனிடம், "நீ என்னைப் பொருட்படுத்தாவிட்டால், நானும் உன்னைப் பொருட்படுத்த மாட்டேன். என்னை உன் காலடியில் நீ நசுக்கிக்கொண்டேயிருப்பது; நான் உனது காலைச் சுற்றிக் கிடப்பதா? அந்த மாதிரி காதல் எனக்கு வேண்டாம்" என்று எப்படியும் அவனிடம் சொல்லிவிட வேண்டியதுதான் என்று அவள் தீர்மானித்துவிட்டாள். அதன் பிறகு கணவனைச் சந்தித்தாலும் கம்பீரமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு போகத் தொடங்கினாள். "உன்னிடம் இரக்கம் கொண்டே உன்னை என் கணவனாகக் கொண்டிருக்

கிறேன். உனது காலடியில் என் பிராணன் விழுந்து கிடப்பதாகவும், ஆகையால் உன்னைக் கண்டபோ தெல்லாம் இனிமையான புன்முறுவல் பூப்பேன் என்றும் நினைக்காதே'' என்று அவனுக்கு இடித்துக் காட்ட விரும்பினாள்.

கமலா எப்போதாவது வேலைக்காரர்களையோ அல்லது வேலைக்காரிகளையோ திட்டிக்கொண்டிருக்கையில் தன்னை யறியாமல் அவர்களுக்குப் பரிந்து கொண்டு காசிநாதன் ஏதாவது சொல்லிவிட்டால், அந்த வார்த்தையைக் கேட்டும் கமலா அசட்டை செய்துவிட்டு முன்போலவே திட்டத் தொடங்குவாள். "என் வேலைக்காரன்; என் வேலைக்காரிகள்; என் மாளிகை—என் இஷ்டப்படி பேசுவேன். நடுவில் வந்து பஞ்சாயத்துச் செய்ய உன்னை யார் அழைத்தது?'' என்று சொல்வதுபோ லிருக்கும் அப்போதெல்லாம் அவளுடைய பாவனை.

ஆனால், இதனாலேயே திருப்தி அடைந்துவிட முடியுமா? தனது உத்தேசந்தான் பூர்த்தியாகி விடுமா? காசிநாதனைத் துளியாவது இது அசைத்திருந்தால் சற்றுத் திருப்திப்படலாம். யார் என்ன தான் செய்தாலும், அவன், தனது மந்தகாசமான முகத் தோற்றத்தின் மூலம், "என்னை அசைக்க முடியாது. இமயத்தின் சிகரம் போன்ற ஒருவனை லவலேசமும் ஊறு உண்டாக்குவதற்கு உன்னிடம் சக்தி இல்லை. எத்தனை புயல் மழை அடித்தாலும், எத்தனை மரம் செடி கொடிகள் துவம்சம் ஆனாலும், என்னை மட்டில் நீ கொஞ்சமும் அசைக்க முடியாது'' என்றே அறிவுறுத்திக் கொண்டிருந்தான்.

சரி ; கமலா காதலிக்க வில்லையா? காதலிக்கத் தான் காதலிக்கிறாள். ஆனால், அந்தக் காதல் எல்லை யற்ற கடலைப் போன்றதல்ல. எல்லை கட்டி, 'இதற்குமேல் போகாதே' என்ற நிபந்தனைக் குட் பட்டது போல் இருந்தது.

ஒரு நாள் கிழ வேலைக்காரியிடம் கமலா தன் துக்கத்தைச் சொல்லி அழுதாள் : "அப்பா, என்னை ஒரு மிருகத்தினிடம் ஒப்படைத்துப் போய்விட்டார்" என்றாள்.

"அதென்ன அம்மா"

"என்னிடம் என்ன வென்று கேட்கிறாய்? நீங்க ளெல்லாரும் சேர்ந்து என்னைக் காலையும் கையையும் கட்டி கிணற்றிலே போட்டிருக்கலாமே ! அது இதைவிட மேலா யிருக்குமே ?"

"இம்மாதிரி பேசாதே அம்மா"

"ஏன் பேசக்கூடாது? நீங்கள் செய்த வேலையை, நான் ஒருதரம்கூட வாய் திறந்து சொல் லக் கூடாதா ?"

"இல்லை, இல்லை ; அப்படி யல்ல. அவர் ரொம்ப நல்ல மனிதராச்சே, ஆனால், கொஞ்சம் பைத்திய மிருக்கிறது. அவருடைய தகப்பனாரும் சற்றுப் பைத்தியம் தான். ஆகையினால் சின்ன எஜமான ரிடமும்......."

"நீ சும்மா இரு. பைத்தியமென்று உளறாதே. தகப்பன் பைத்தியமா யிருந்தால், மகனும் பைத்திய மாகி விடுவதில்லை. இவருக்குப் பைத்தியம் துளிக் கூட இல்லை. என்னை வேண்டு மென்றே இவர் வாதிக்கிறார் !"

கணவன் பைத்தியம் என்று கேட்கவும், கமலாவின் இருதயம் புண்படத் தொடங்கியது.

மூன்று நாளாகக் காசிநாதனின் விஷயம் ஒன்றுமே தெரியவில்லை. இரண்டு நாள் வரையில் வேண்டுமென்றே கமலா விசாரிக்கவில்லை. ஆனால், மூன்றும் நாள் அவள் திகிலடைந்து, தர்வானிடம், "பாபு இரண்டு நாளாக வீட்டுக்கு வரவில்லை; நீங்களும் தேடவில்லை. பின்னே நீங்களெல்லாம் எதற்காகத்தான் இங்கே இருக்கிறீர்கள்?" என்று கோபித்துக்கொண்டு, அவனை வெளியே அனுப்பினாள்.

"யாரோ எங்கேயோ போவார்கள், வருவார்கள். அதை யெல்லாம் நாம் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?" என்று அவன் நினைத்தான்.

கடைசியில் கஜான்சியால் விஷயம் தெரியவந்தது. சின்ன எஜமான் மூவாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு எங்கேயோ வெளியில் போயிருக்கிறார்; ஆனால், எங்கே போயிருக்கிறார், எப்பொழுது வருவார் என்று தெரியாது. அதை அவர் யாரிடமும் சொல்லிப் போகவில்லை.

இந்தத் தகவலைக் கேட்ட கமலா கொஞ்சநேரம் நெற்றியின் மேல் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். பிறகு, தனது தந்தையின் வக்கீலைக் கூப்பிட்டு, "எனது ஜமீன் காரியங்களை யெல்லாம் நிர்வகிக்க ஒருவர் வேண்டும். யோக்யமான ஓர் ஆளை ஒரு வாரத்துக்குள் நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள். சம்பளம் எத்தனையானாலும் கொடுத்து விடுகிறேன்" என்றாள்.

அத்தியாயம் 8

காசிநாதன் கல்கத்தா வந்து சேர்ந்தான். பகல் பூராவும் மழையில் நனைந்து, சேற்றையும் சகதியையும் தாண்டிக்கொண்டு, மாலையில் ஒரு சிறிய சந்தில் சாதாரணமானதொரு வீட்டிற்குள்ளே பிரவேசித்தான். அவனது கையில் இரண்டு மருந்துப் புட்டிகளும் ஒரு டின் பிஸ்கோத்தும் இருந்தன; மேல் வேஷ்டியில் மாதுளை முதலிய சில பழங்கள் இருந்தன.

அந்த வீட்டில் ஓர் அறையில் ஒரு நோயாளி படுத்துக்கொண்டிருந்தான். அவனது தலைமாட்டிலே ஒரு ஸ்திரீ உட்கார்ந்து அவனது நெற்றியைப் பிடித்துக் கொண்டிருந்தாள். காசிநாதன் நுழைந்ததும், "காசி அண்ணை, இந்த மழையிலே ஏன் நனைந்து கொண்டு வந்தாய்? எங்கே யாவது நின்று விட்டு வரக்கூடாதா?" என்று அவள் கேட்டாள்.

"அதெப்படி முடியும்? மழையிலே நனைவதால் உண்டாகும் கஷ்டத்தைவிட, நின்றிருந்தால் வேதனையே அதிகமாயிருக்கும்."

விந்து யோசித்துப் பார்த்தாள். காசி அண்ணை வின் பேச்சு பொய்யல்ல. ஆகையால் அவள் பேசாமலிருந்து விட்டாள்.

சென்ற பல வருஷங்களாக விந்து எத்தகைய கஷ்டத்தை அனுபவித்து வருகிறாள் என்பது அவளுக்குத் தான் தெரியும். அவளை நாம் அவளுடைய

தாயார் வீட்டிலே பார்த்தோம்; அப்புறம் பார்க்க வில்லை. இப்பொழுது அவளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லியாக வேண்டும். என்றைக்கு ஜமீன்தார் வீட்டுப் பெண்ணைப் பார்க்கப் போகத் தான் தயாராக இருந்தும் அவள் செல்ல முடியவில்லையோ அதற்கு அடுத்த நாளே, தனது மாமனர் கோபால் பாபுவின் கடுமையான நோயைக் கேள்வியுற்று மாமனர் வீட்டுக்கு உடனே வர நேர்ந்தது. அவளுடைய மாமனர் உண்மையிலேயே அதிக நோயாயிருப்பதைக் கண்டாள். எல்லோரும் சேர்ந்து கூடுமான வரையிலும் சிகிச்சை செய்தார்கள். ஆனல், கோபால் பாபுவை எந்த விதத்திலும் பிழைப்பிக்க முடியவில்லை. நோய் அளவு மீறி விட்டதால், கோபால் பாபு, "சின்ன மருமகளைக் கொஞ்சம் என் அருகில் அழையுங்கள்—அவளை ஒரு தரம் பார்க்கிறேன்" என்றார்.

சிறிய மருமகள் நமது விந்து வாசினிதான். இறப்பதற்கு இரண்டொரு நாளைக்கு முந்தி, விந்துவினிடம் கோபால் பாபு, "அம்மா! இந்தா சாவி. அந்தப் பெட்டியில் இருப்ப தெல்லாம் உனக்கே சொந்தம். எடுத்துக் கொள்" என்றார்.

விந்து கைநீட்டி அதை வாங்கிக் கொண்டாள். "கிழவன் சாகும்போது தனது சகல சொத்தையும் சின்ன மருமகளுக்கே கொடுத்து விட்டுப் போய் விட்டான்" என்று இரண்டாம் மருமகள் நினைத்துக் கொண்டாள்.

இன்னும் ஒரு விஷயம்; கோபால் பாபு நோய்ப் படுக்கையிலிருக்கையில், ஒரு நாள் தமது நான்கு

புதல்வர்களையும் அருகில் அழைத்து, "பாருங்கள், உங்களுக்குள் துளிக்கூட ஒற்றுமை யில்லை; உங்கள் அம்மாவும், உயிரோடில்லை. ஆகையால், நான் இறந்த பிறகு நீங்கள் ஒரே குடும்பமாக இருக்க வேண்டாம். சூதும் வாதும் பேசிச் சண்டை சச்சரவுகள் செய்து கொள்வதற்கு முன்பே ஏதோ இருக்கிற சொத்தைப் பிரித்துக் கொண்டு தனித் தனியாகப் போய் விடுங்கள். நான் வைத்துவிட்டுப் போவதோடு, இன்னும் சொற்ப வருமானம் வந்தாலும் போதும்; சுலபமாகக் காலந் தள்ளுவீர்கள்" என்று உபதேசித்தார்.

தந்தை இறந்த பிறகு நான்கு சகோதரர்களும் தனித்தனியாகப் பிரிந்து விட்டார்கள். விந்து ஒரு நாள் அந்தப் பெட்டியைத் திறந்தாள்; அதிலே ஒரு 'ராமாயண'ப் புத்தகமும் ஒரு 'மஹாபாரத'ப் புத்தகமும் தவிர, வேறு ஒன்றையும் காணோம். ஆசை நிராசையானாலும்கூட, காலஞ் சென்ற மாமனாரின் வெகுமதியை விந்து தன் கண்ணிலே ஒற்றிக் கொண்டாள். தழ தழத்த குரலில், 'இது அவருடைய அன்பின் பரிசு—இதுவே நமக்கு விலையுயர்ந்த ரத்தினம்" என்று தனக்குத் தானே அவள் சொல்லிக் கொண்டாள்.

விந்து சிலநாள் சுகமாக இருந்தாள். அதற்கப்புறம் ஆபத்தின் அறிகுறி தென்பட்டது. அவளுடைய கணவன் யகேஷ் பாபு நோயில் விழுந்தார். அவள் தனது உடலைப் பொருட்படுத்தாமல் கணவனுக்கு ஸேவை புரிந்தாள். நிலத்தை அடகு வைத்து வைத்தியம் பார்த்தாள். ஆனால், அவர்

எந்த விதத்திலும் குணமடையவில்லை. கிராமத்தில் அக்கம்பக்கத்தார்கள், "கல்கத்தாவுக்கு அழைத்துப் போய் வைத்தியம் பார்க்க வேண்டும்" என்று யோசனை சொன்னார்கள். அப்பொழுது விந்து தன்னிடமிருந்த நகை நட்டுகளை யெல்லாம் விற்று, கணவனை கல்கத்தாவுக்குக் கூட்டிச் சென்றாள். அங்கே பலவிதமான வைத்தியம் நடந்தது; மிஞ்சியிருந்த நகைகளும் அடமானமாயின. ஆனால், நோய் துளியும் அசைந்து கொடுக்கவில்லை. பணக் கஷ்டத்தினால், இப்பொழுது அவ்வளவு நன்றாக வைத்தியமும் செய்ய முடியவில்லை. விந்து தனது பெரிய மைத்துனருக்கு எல்லா விவரங்களையும் எழுதினாள். ஆனால், ஒரு பலனும் உண்டாகவில்லை. அப்புறம் அவருக்கு இளைய இரண்டு மைத்துனர்களுக்கும் அவள் எழுதினாள். அவர்களும் தங்களுடைய தமையனைப் போலவே மௌனம் சாதித்து விட்டார்கள். இப்பொழுது, ஒன்று, வேறு ஏதாவது வழி செய்தாக வேண்டும்; அல்லது விஷத்தைத் தின்று இறக்க வேண்டியதுதான் என்று முடிவு செய்து கொண்டாள்.

மனைவியின் முகத்தைக் கண்டு, யகேஷ் பாபு அவளது வேதனையை அறிந்து கொண்டார். ஒருநாள் விந்துவைத் தமது அருகில் அழைத்து, உட்கார வைத்து, ரொம்ப அன்புடன் கையைப் பிடித்துக்கொண்டு, "விந்து! என்னைக் கிராமத்துக்கு அழைத்துப் போ; இறப்பதானால், அங்கேயே இறக்கிறேன்—இங்கே இறந்தால், தூக்குவதற்குக் கூட ஆள் கிடைக்காது" என்றார்.

இறப்பது திண்ணம்; ஏனென்றால், வேறு உபாயமில்லை என்று விந்து அறிந்தாள். கணவனைக் கிராமத்துக்குக் கூட்டிப்போவதற்குக்கூட ஒரு வழியுமில்லை. ஆனால், கணவனை இம்மாதிரி நிலையில் விட்டுவிட்டு அவளால் எப்படி இறக்க முடியும்? அவர் இறப்பது நிச்சயமேயானால், பின்னே வெட்கப்பட்டு என்ன ஆகும்? தீர யோசித்து வெட்கத்தைத் தூரக் கட்டிவைத்துவிட்டு, காசிநாதனுக்குக் கடிதம் எழுதி, அதில் அவள் எல்லா விஷயமும் தெரிவித்திருந்தாள். அப்புறம் நடந்ததெல்லாம் நமக்கே தெரியும். வரும்போது காசிநாதன் போதிய பணம் கொண்டு வந்திருந்தான். அந்தப் பணத்தைக் கொண்டு, நகரத்தின் சிறந்த டாக்டர்கள் பலரைக் காசிநாதன் கலந்தான். இனி இடம் மாற்றாவிட்டால், குணமாகாது என்று எல்லோரும் சொன்னார்கள். விந்துவையும் யகேஷ் பாபுவையும் பிறரையும் அழைத்துக்கொண்டு, வைத்தியநாத் என்னுமிடத்துக்கு, காசிநாதன் சென்றான். அங்கே இரண்டு மாதம் இருந்து பார்க்கவே, "இந்தத் தடவை யகேஷ் பாபு தப்பித்துக்கொண்டார்" என்று எல்லோரும் அறிந்தார்கள். ஆனாலும், அங்கேயிருந்து திரும்புவதற்குச் சிறிது காலம் பிடிக்குமாதலால், அவர்களை அங்கேயே விட்டுவிட்டு, காசிநாதன் மட்டும் வீடு திரும்பினான்.

கமலா அதிகாலையில் கணவனைச் சந்தித்ததும், "எப்போது வந்தீர்கள்?" என்றாள்.

"ராத்திரி"

கமலா அதற்குமேல் ஒன்றும் பேசாமல் தன் காரியமாகப் போய்விட்டாள். காசிநாதன் கச்சேரிக்குச் சென்ருன். பல நாளைக் கப்புறம் திடீரென்று எஜமானரைப் பார்த்தாலும் எல்லா உத்தியோகஸ்தர்களும் எழுந்து நின்று கொண்டார்கள்; ஒரே ஒரு வாலிபன் மட்டிலும் தனது வேலையைப் பார்த்துக்கொண்டு, நாற்காலியில் அலட்சியமாய் அமர்ந்திருந்தான். புதிதாக வந்தவரைக் கண்டு எல்லா உத்தியோகஸ்தர்களும் மரியாதை செய்ததை அவன் கவனிக்கவில்லை. காசிநாதன் தானே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு, உட்கார்ந்தான். இந்தப் புதிய மானேஜரின் பெயர் விஜய கிஷோர்தாஸ்; பி. ஏ. பாஸ் செய்திருக்கிருன். அதிகத் திறமை யுடையவன். ஆகையால், அவனை மானேஜராக வக்கீல் விநோதபாபு அமர்த்தியிருக்கிருர்.

மானேஜர் வெகு நேரத்துக் கப்புறம் காசிநாதனின் பக்கம் திரும்பி, "நீங்கள் என்ன காரியமாக இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"இல்லை; என் வேலை ஒன்றும் இல்லை. இங்கே நடக்கும் வேலையைப் பார்க்கவே வந்திருக்கிறேன்."

அப்பொழுது திவான் எழுந்து, "அவர்கள் நமது மருமகப்பிள்ளை" என்ருர்.

விஜயபாபு எழுந்திருந்து, அன்பாக ஸம்பாஷணை செய்தார்.

இச்சமயம், ஒரு வேலைக்காரன் வந்து, விஜய பாபுவிடம், "எஜமானி அழைக்கிருர்கள்" என்ருன்.

விஜயபாபு போன பிறகு, திவானிடம் காசிநாதன், "இவர் யார்?" என்று கேட்டான்.

"புதிய மானேஜர்"

"யார் வைத்தது?"

"எஜமானி"

"ஏன்?"

"காரியங்கள் சரிவர நடக்காதிருந்திருக்கும். அதனுல்தான்."

"இப்போது இவர் எங்கே போயிருக்கிருர்?"

"உள்ளே அறைக்குள்."

காசிநாதன் வேறு ஒன்றும் கேட்காமல், உள்ளே சென்று விட்டான். ஒரு அறையில் திரைக்கு முன்னுல் விஜய பாபு நின்று கொண்டிருப்பதையும் திரைக்குப் பின்னுல் நின்றவண்ணம் யாரோ மெதுவான குரலில் பேசிக்கொண்டிருப்பதையும், அவன் கண்டான். அவர்கள் எதைப் பற்றிப் பேசுகிருர்கள் என்பதைக் காசிநாதன் அறிந்து கொண்டான். ஆனுல், ஒன்றும் கேட்காமல், அந்தப் பக்கம் திரும்பியே பார்க்காமல், தன் பாட்டுக்கு அவன் சென்றுவிட்டான்.

மத்தியானம் கமலாவை மறுபடியும் காசிநாதன் சந்தித்தான். அவள் கம்பீரமாக, "உடம்பு நன்ருய்த்தானே இருக்கிறது?" என்று கேட்டாள். காசிநாதன் அப்படியே தலையைத் திருப்பிக் கொண்டு, "நன்ருய்த் தான் இருக்கிறது" என்று பதில் அளித்தான்.

கமலா வேறு ஒன்றும் பேசாமல் சென்றுவிட்டாள். நின்று பேசுவதற்கு அவளுக்கு இப்போது

நேரமில்லை. எத்தனையோ வேலைகளிருக்கின்றன; தானே ஜமீன் பொறுப்புக்களை எடுத்துக்கொண்ட தால், அவளுக்கு மூச்சுவிடக்கூட ஒழிவில்லை.

ஒருநாள் காலையில் மானேஜரைக் காசிநாதன் அழைத்துவரச் சொன்னான். "இப்பொழுது நேர மில்லை; நேரம் கிடைத்தால் வருகிறேன்" என்று வேலைக்காரனின் மூலமே அவர் சொல்லி அனுப்பி விட்டார். அதன்பேரில் காசிநாதன் தானே கச் சேரிக்குச் சென்று, விஜய பாபுவைத் தனியாக அழைத்து, "உங்களுக்கு நேரமில்லைப்போல் இருக் கிறது. ஆகையால், நானே புறப்பட்டு வந்தேன். இன்று எனக்கு ஐந்நூறு ரூபாய் வேண்டும். ஓய்வு கிடைத்ததும், மேலே அனுப்பிவையுங்கள்" என்றான்.

"எதற்காக வேண்டும்?"

"இது உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை"

"வேண்டியதில்லைதான். ஆனால், எஜமானி யின் உத்திரவில்லாமல் நான் எப்படிக் கொடுக்க முடியும்?" என்றார் விஜய பாபு.

விஷயம் வேறு மாதிரி யாகிவிட்டது என்று இப்போதுதான் காசிநாதன் தெரிந்து கொண் டான்: "நான் சொன்னாலே போதும். இன்னொரு வர் உத்திரவுகூட வேண்டுமா?" என்று கேட்டான்.

விஜய பாபு உறுதியான குரலில், "அல்ல. எதற்குப் பணம் கொடுப்பதையும் எஜமானி தடுத் திருக்கிறார்கள்" என்றார்.

காசிநாதன் இதன்மேல் கமலாவைச் சந்தித்து "புதிய மானேஜரை விலக்கிவிடு" என்றான்.

“யாரை ?”

“புதிதாய் மானேஜர் வேலை பார்ப்பவனை.”

“ஏன்? அவர் என்ன குற்றம் செய்தார் ?”

“என்னிடம் சரியாய் நடந்து கொள்ளவில்லை ”

“என்ன செய்தார் ?”

“நான் கூப்பிட்டும் வராமல், வேலைக்காரன் மூலம் நேரமில்லை என்று சொல்லி அனுப்பிவிட்டான்.”

கமலா சிரித்துக்கொண்டு, “வாஸ்தவமாகவே நேர மில்லாதிருக்கும். நேரமில்லா விட்டால் எப்படி வருவது ?” என்றாள்.

மனைவியின் முகத்தைப் பார்த்தான் காசிநாதன். “அதுகூடப் பரவாயில்லை. அதன்பின், நானே நேரில் போய்ப் பணம் கேட்டதற்கு, ‘எஜமானியின் உத்திரவில்லாமல் கொடுக்கமுடியாது’ என்று முகத்தி லடித்தாற்போல் சொல்லிவிட்டான் ” என்றான்.

கமலா இன்னும் சிரித்துக்கொண்டே, “எத்தனை ரூபாய் கேட்டீர்கள் ?” என்றாள்.

“ஐந்நூறு.”

“கொடுக்க வில்லையா ?”

“இல்லை. எனக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என்று நீ சொல்லியிருக்கிறாயா ?”

“ஆமாம், இவ்விதம் பணத்தை வீணாகச் செலவழிப்பது எனக்குப் பிடிக்கவில்லை.”

காசிநாதன் கல் மனம் படைத்தவன்தான். ஆனாலும், உள்ளுக்குள் ரொம்பத் துக்கப்பட்டான். கமலாவின் இம்மாதிரி நடத்தையையோ அல்லது

பேச்சையோ அவன் இதற்குமுன் ஒரு போதும் கண்டதில்லை. இதைக் கண்டதும், மிகுந்த சஞ்சல மடைந்த அவன், "எனக்குக் கொடுப்பது வீண் செலவா?" என்று கேட்டான்.

"கண்டபடி ஊதாரித்தனமாய்ச் செலவழிப் பதற்குத்தான் வீண் செலவு என்று பெயர்.'

"அவசியமான செலவுதான் செய்கிறேன். ஊதாரித்தனமாய்ச் செலவழிக்க வில்லை."

"என்ன அவசியச் செலவு?"

"ஒருவருக்குக் கொடுக்க வேண்டும்."

"கொடுத்துக்கொண்டே யிருந்தால் வாங்குகிற தெங்கே? உங்களிடம் பணம் இருந்தால், கொடுத் துக் கொள்ளுங்கள்—நான் தடுக்க வில்லை."

காசிநாதன் பேசாம லிருந்து விட்டான். இந்த வார்த்தைகள் அவன் காதில் நாராசம்போல் பாய்ந் தன. அவன் வெளியில் வந்து தனது கடிகாரம், மோதிரம் முதலியவைகளை யெல்லாம் ஐந்நூறு ரூபாய்க்கு விற்று, வைத்யநாத் நகரத்துக்கு அனுப் பினன். மேலும், கடிதத்துக்கு அடியில், "தங் கையே! இனிப் பணம் கேட்காதே. என்னிடத்தில் இதற்கு மேல் ஒன்றும் கிடையாது" என்றும் எழுதி விட்டான்!

அன்றிருந்து, அவன் உள்ளே செல்லவில்லை; கமலாவும் ஏனென்று கேட்கவில்லை. இவ்விதம் அநேக நாட்கள் சென்றன. ஒருநாள் வேலைக்காரன் வந்து, "உங்களை ஒரு பிராமணன் பார்க்க வேணு மென்கிருர்" என்ருன்.

காசிநாதன் ஆச்சரியத்துடன் வெளியே சென்று பார்த்தான். ஒரு கிழப்பிராமணன் தூணருகில் வந்து நின்று கொண்டிருந்தான். "தாங்களோ கீர்த்தி வாய்ந்தவர்கள். பிராமண சொத்தை அபகரிக்காதீர்கள்" என்று திடுதிப்பென்று அவன் புலம்பினுன்.

காசிநாதன் பயந்து, "என்ன விஷயம்?" என்று கேட்டான்.

பிராமணன், "தங்களுக்குப் பரமாத்மா சகல பாக்கியமும் கொடுத்திருக்கிறார். ஆனால், என்னிடம் அந்தச் சிறு துண்டு நிலத்தைத் தவிர, வேறு ஒன்றுமில்லை; அதையும் நீங்கள் பிடுங்கிக் கொள்ளாதீர்கள்" என்றான். இதைச் சொல்லிக்கொண்டு வரும்போதே, அவன் கண்ணீர்விடத் தொடங்கினான்.

காசிநாதன் வியாகூலமடைந்து பிராமணனின் கையைப் பிடித்து, அவனைத் தன்னருகில் உட்கார வைத்தான். பிறகு, "எல்லா விஷயத்தையும் விவரமாகச் சொல்லுங்கள்" என்றான்.

பிராமணன் அழுதுகொண்டே, "நீங்கள் தர்மப்பிரபு. பூமி என்னுடைய தல்ல என்று உங்கள் வாயால் சத்தியம் செய்தால் போதும்; நிலத்தை விட்டு விடுகிறேன்" என்றான்.

"உங்களுடைய தல்ல என்று யார் சொல்லுகிறார்கள்?"

"இல்லையானால், பின்னே ஏன் விஜய பாபு— உங்களுடைய புதிய மானேஜர் — என் பேரில் வியாஜ்யம் தொடுத்திருக்கிறார்?"

"வியாஜ்யம் தொடுத்திருக்கிருரா? அது எனக்குத் தெரியாது?"

பிராமணன் தனக்குவந்த சம்மனைக் காட்டி, "எப்போது வழக்குத் தொடுத்தாயிற்ருே, அப்போது நானும் எதிர் வழக்காட வேண்டியதுதான். உங்களையே சாட்சி போடப் போகிறேன். எனக்கு வேறே சாட்சி கிடையாது. நான் ஏழை; தங்களோடு வழக்காடுவது எனக்கு நல்ல தல்ல. என்ருலும் கூட, நான் ஒரு பிச்சைக்காரனு யிருந்தாலும், வந்த வழக்கை நடத்தாமல் விடமாட்டேன்" என்று சொல்லி, வெளியே புறப்பட்டான்.

பிராமணன் கோபத்தோடு போவதைப் பார்த்த காசிநாதன், அவனுடைய கைகளை பிடித்து உட்கார வைத்து, "உங்களுக்குச் சாதகமான வழியில் சமாதானத்துக்கு நான் முயற்சிக்கிறேன். அது பயன்படாவிட்டால் பிறகு உங்களிஷ்டம் போல் செய்யுங்கள்" என்ருன்.

பிராமணனுக்குக் காசிநாதன் விடை கொடுத்தனுப்பி விட்டு, விஜய பாபுவைக் கூப்பிட்டு, "அந்த நிலம் நம்முடைய தல்ல; அப்படி யிருக்க பிராம்மணனை ஏன் வீணுகத் தொந்திரவு செய்கிறீர்?" என்று கேட்டான்.

"அது எஜமானியின் உத்திரவு."

காசிநாதன் கோபமுற்று, "எஜமானி என்ன பிறர் பொருளைப் பிடுங்கிக் கொள்ளவா உத்திரவிட்டாள்?" என்ருன்.

"நிலம் நமக்குச் சொந்தம்."

"இல்லை; நம்முடைய தல்ல."

விஜய பாபு சிறிதுநேரம் பேசாமலிருந்தான்; பிறகு, "நான் வேலைக்காரன். உத்திரவுப்படி செய்தேன்; இன்னும் செய்வேன்" என்றான்.

இந்த விஷயத்தைக் கமலாவிடம் சொல்ல, காசிநாதனுக்கு வெட்கமாயிருந்தது. ஆனாலும், அவன், வெட்கத்தை விட்டு, அவளிடம் சென்று, "அந்த நிலம் உன்னுடையதல்ல. பிறர் சொத்தைப் பிடுங்கிக் கொள்ளாதே" என்றான்.

"நான் அதை அபகரிக்கிறேன் என்று யார் சொன்னது?"

"யாரோ சொன்னார்கள்; யாராயிருந்தாலென்ன? அந்த நிலம் உன்னுடையதல்ல; அவ்வளவுதானே. ஆகையால், பொய் வழக்குத் தொடுக்க வேண்டாமென்று விஜய பாபுவைத் தடுத்துவிடு."

கமலா சலிப்புடன், "விஜயபாபு நம்முடைய வேலைக்காரர். தமது வேலை என்னவென்று அவருக்குத் தெரியும். அவருடைய காரியத்தில் நீங்கள் குறுக்கிட வேண்டியதில்லை" என்றாள்.

பல நாட்களுக்குப் பிறகு அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. சாட்சிக் கூண்டில் நின்றுகொண்டு, காசிநாதன், "காலஞ்சென்ற என் மாமனார் பிரிய பாபுவின் காலத்திலிருந்து ஜமீன் காரியங்களை நான் பார்த்து வந்திருக்கிறேன். அவருக்குப் பிறகு கூட நான் வெகுகாலம் நிர்வாகம் செய்திருக்கிறேன்..........அந்த நிலம் கமலா தேவியுடையது அல்ல என்பது எனக்குத் தெரியும்" என்றான்.

தங்களுடைய வழக்கு தோல்வி அடைந்த வருத்தத்துடன், விஜய பாபு வீடு திரும்பினர். பிரதிவாதிப் பிராம்மணன் தன் இரு கைகளேயும் தூக்கி, காசிநாதனே ஆசீர்வாதம் செய்துவிட்டு, தனது வீட்டுக்குச் சென்றான்.

அத்தியாயம் 9

திரைக்கு எதிரில் நின்றபடி, வழக்கு விவரங்களை, தமது சொந்த அபிப்பிராயங்களையும் கலந்து, எஜமானிக்கு விஜய பாபு வியாக்கியானம் செய்ய லானார்: "சின்ன எஜமானரால்தான் நமது வழக்கு தோல்வி அடைந்தது" என்று அவர் திட்டமாய்க் கூறினார். இதனால் திரைக்குள்ளே யிருந்த தாமரைக் கண்கள் அகன்று மலர்ந்தன. வெகு நேரத்துக் கப்புறம், "நீங்கள் உள்ளே வாருங்கள்; எவ்வ ளவோ பேசவேண்டியிருக்கிறது" என்று அவரைக் கமலா அழைத்தாள். விஜய பாபுவும் அப்படியே உள்ளே சென்றார். இரண்டு பேரும் வெகு நேரம் வரையில் மிக மெதுவாகப் பேசிக்கொண்டிருந் தார்கள். பிறகு, விஜய பாபு வெளியே வந்து விட்டார்.

அநேக நாளைக் கப்புறம், காசிநாதன் இன் றையதினம் சாப்பிடும்போது, அவன் அருகில் வந்து கமலா உட்கார்ந்தாள். இப்பொழுது, அவள் முன்போல உக்கிரத்துடன் இருக்கவில்லை. பூரண சாந்தத்துடனும் அமையுடனும் இருந்தாள். கொஞ்ச நேரம் கழிந்த பிறகு, கமலா மெதுவாக, "உள் ரகசியம் அறிந்த விபீஷணனால் தான் சொர்ண மயமான லங்காபுரி சாம்பலாயிற்று—உங்களுக்குத் தெரியுமா?" என்றாள்.

காசிநாதன் சாப்பிட்டுக்கொண்டே, "தெரி யும்" என்றான்.

"தெரியாம லிருக்குமா? அவனும் மற்றவர்களின் அன்னத்தினல்தான் ஆளானுன்" என்ருள் கமலா.

காசிநாதன் ஒன்றும் பேசவில்லை.

கமலா சிறிது நேரம் வரையில் பேசாம லிருந்துவிட்டு, "பிறரது சோற்றை உண்டு இவ்வளவு பெரியவர் ஆனவருக்கு—இப்பொழுதுகூட அந்நியர் இடும் உணவு இல்லாவிட்டால் பட்டினி கிடக்க வேண்டியவருக்கு—உண்மை பேசும் விருப்பம் எதற்கு? இத்தனை கர்வம் எதற்கு? இதுதான் என் சந்தேகம்" என்ருள்.

காசிநாதன் பேசாமல் ஒவ்வொரு கவளமாக எடுத்து வாயில் போட்டுக் கொண்டிருந்தான்.

"கசாப்புக்காரன்கூட, உணவிட்டவன் கழுத்தில் கத்திவைக்க, கொஞ்சம் யோசிப்பான்."

"கமலா!"

"தம்முடைய பெண்டாட்டியின் அன்னத்தால் வாழ்கிறவருக்கு இத்தனை வீர தீரம் வேண்டியதில்லை. தினம் தினம் உங்களுடைய இந்த நடத்தைகளை எல்லாம் நான் பார்க்காதிருந்தால்—"

காசிநாதன் சிரித்துக்கொண்டு, "என்னை வீட்டை விட்டு துரத்துகிருயா?" என்று கேட்டான்.

"ஆம்; அப்படித்தான் செய்கிறேன்" என்று திடமாய்க் கூறினுள் கமலா.

தான் சாப்பிட்டுக்கொண்டிருந்த தட்டைத் தள்ளி வைத்துவிட்டு, கமலாவின் முகத்தை உற்றுப் பார்த்த காசிநாதன், "கமலா! நான் ஒரு போதும் உன்னிடத்தில் கோபமடைந்ததில்லை; ஒரு

போதும் உன்னிடம் கடுமையான வார்த்தைகளையும் சொன்னதில்லை; நீ சொல்கிறதுபோல, இதற்கு முந்தி யாரும் என்னிடம் இம்மாதிரி சொன்னதில்லை. இன்றிருந்து நான் உன்னுடைய சாப்பாட்டைச் சாப்பிடுவதில்லை. இதனால் நீ சுகமடைய முடியுமானால், மகராஜியாய்ச் சுகப்படு" என்று சொல்லிவிட்டு, எழுந்து நின்றான்.

கமலாவும் கர்வத்துடன் நின்றுகொண்டு, "உண்மை பேசுகிறவரானால் தமது சபதத்தை நிறைவேற்ற வேண்டும்" என்றாள்.

"அவசியம் நிறைவேற்றுவேன். நீ சொன்ன வார்த்தைகளே உன் ஜன்ம சத்துருவா யிருக்கும். நான் உன்னை மன்னித்துவிட்டேன். ஆனால் ஆண்டவன் உன்னை மன்னிப்பானா?"

கமலா இன்னும் அதிகக் கோபமடைந்தாள். "உமது சாபம் என்னை ஒன்றும் செய்து விடாது" என்றாள்.

"அப்படியே போகட்டும். எல்லாம் கடவுளுக்குத் தெரியும். உனக்கு நான் சாபம் கொடுக்கவில்லை. தர்மத்தை அனுசரித்து நீ சுகமா யிரு என்றே ஆசீர்வதிக்கிறேன்" என்று சொல்லி, காசிநாதன் வெளியேறினான்.

வெளியில் வந்ததும், தன் வியாகரணம், சாகித்யம், தர்சன், ஸ்மிருதி முதலிய எல்லாப் புத்தகங்களையும் ஒவ்வொன்றாக அவன் கிழித்தெறிந்தான்; தன்னிடம் இருந்த பண்டங்களை எல்லாம் வேலைக்காரர்களுக்குப் பகிர்ந்தளித்தான். அப்புறம் ராத்திரியானதும், கமலாவின் அறைக் கதவைத்

தட்டிக் கூப்பிட்டான். கமலா விழித்துக் கொண்டு தானிருந்தாள். ஆனல், அவள் பேசவில்லை. கதவு திறந்துதா னிருந்தது. காசிநாதன் உள்ளே பிரவே சித்தான். கமலா கண்ணை மூடிக்கொண்டு கட்டி லின் மேல் படுத்திருப்பதைக் கண்டான். அருகில் சென்று நெற்றியின்மேல் கை வைத்து "கமலா" என்று மறுபடியும் அழைத்தான். ஒரு பதிலும் இல்லை. "போகிறபோது மீண்டும் உன்னை ஆசீர் வதித்து விட்டுப் போகிறேன்" என்று சொல்லி, பேசாமல் வெளியில் வந்தான். காசிநாதன் சென்ற பிறகு, கமலா படுக்கையிலிருந்து எழுந்து ஜன்ன லருகில் போய் உட்கார்ந்தாள். உட்கார்ந்தவளுக் குப் பொழுது விடிந்ததே தெரியவில்லை. அவள் மறுபடியும் விரிப்பில் வந்து படுத்துக்கொண்டாள். மீண்டும் விழித்துக் கொண்டபோது, பொழுது கிளம்பி யிருந்தது; வீட்டில் ஒரே கலவரமா யிருந் தது. அவள் நன்கு விழிப்படைய வில்லை; அதற் குள் ஒரு வேலைக்காரி ஓடிவந்து, "அம்மா! பெரிய ஆபத்து வந்து விட்டதே! சின்ன எஜமானரை யாரோ கொலை செய்து விட்டார்களே!" என்று பரபரப்புடன் புலம்பினள்.

கொதிக்கும் எண்ணெயைக் கொணர்ந்து யாராவது தன் மேலே கொட்டினல் எப்படித் துள்ளுவார்களோ, அப்படியே கமலாவும் துள்ளி எழுந்தாள். கீழே ஓடிவந்து, "கொன்றுவிட்டார் களா? சின்ன எஜமானரையா?" என்று துடி துடிப்புடன் கேட்டாள்.

"ஆம்" என்று யாரோ பதில் அளித்தார்கள்.

ஏறக்குறைய ஆடையற்ற நிலையில் கமலா வெளி அறைக்குள் பிரவேசித்தாள். அங்கே ரத்த வெள்ளத்தில் அசைவற்றுத் துவண்டு ஒரு சோபா வில் காசிநாதன் கிடப்பதைக் கண்டாள். தேகம் முழுதும் ரத்தமும் தூசும் படிந்திருந்தன. கண்ணி லும் மூக்கிலும் வாயிலும் ரத்தம் வழிந்து வறண்டு காணப்பட்டது. கமலா கூச்சலிட்டு, மூர்ச்சை போட்டு, அங்கேயே விழுந்து விட்டாள்.

ஜமீன்தாரின் மருமகன் இருட்டில் தனியாக எங்கேயோ போய்க் கொண்டிருந்த போது, யாரோ அவனைக் கொலை செய்துவிட்டார்கள் என்று கிரா மம் பூராவும் பேச்சுப் பரவிவிட்டது.

இரண்டு நாளைக் கப்புறம் காசிநாதனுக்கு நினைவு வந்தபோது, போலீஸ் இன்ஸ்பெக்டர், "பாபு! உங்களை யார் இப்படித் தாக்கினார்கள்?" என்று கேட்டார். காசிநாதன் வானத்தைப் பார்த் துக் கொண்டு, கையை உயர்த்தி, "அவன்" என்றான்.

கிழ வேலைக்காரன் அருகில் நின்று கொண் டிருந்தான். அவனுடைய கண்களில் கண்ணீர் பெருகியது.

இன்ஸ்பெக்டர் மறுபடியும், "பாபு! அவர் களைத் தெரியுமா?" என்று கேட்டார். காசிநாதன் தெளிவற்ற குரலில், "தெரியும்" என்றான்.

இன்ஸ்பெக்டர் பரபரப்புடன், "யார் அவர் கள்?" என்றார்.

காசிநாதன் சிறிது நேரம் மௌனமா யிருந்து விட்டு, பிறகு, "நான் பொய் சொன்னேன்; எனக்கு அவர்களைத் தெரியாது" என்றான்.

இன்ஸ்பெக்டர் மறுபடியும் இரண்டு மூன்று தடவை கேட்டார். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. காசிநாதன் அதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை. ஆனல், அடுத்த நாள் வேலைக்காரனைக் கூப்பிட்டு, "வைத்யநாத் நகரில் என் சகோதரி விந்துவாசினி இருக்கிருள். அவளை ஒரு தரம் நான் பார்க்க விரும்புகிறேன். யாரையாவது அனுப்பி அவளை நீங்கள் வரவழையுங்கள்" என்ருன்.

மூன்று நாளைக் கப்புறம் விந்துவாசினியும் யோகேஷ் பாபுவும் வந்து சேர்ந்தார்கள். விந்து கொஞ்சம் திட மனது உடைய பெண்; கமலாவைப் போலல்ல. ஆகையால், அவள் கூச்சலிடவும் இல்லை; மூர்ச்சை யடையவும் இல்லை. கண்ணீரை மட்டும் துடைத்துக் கொண்டு, கலக்கம் நிறைந்த குரலில், "காசி அண்ணு! உன்னை யார் இப்படிச் செய்தது?" என்று கேட்டாள்.

"அது எனக் கெப்படித் தெரியும்?"

"யார் பேரிலாவது உனக்குச் சந்தேக மிருக்கிறதா?"

"அதைக் கேட்காதே, அம்மா!"

விந்து வாய் பேசாமல், காசிநாதனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

காசிநாதன் இவ்வளவு பெரிய காயத்திலிருந்து குணமடைந்து பிழைக்க மாட்டான் என்றே எல்லோரும் நினைத்தார்கள். அபாயமும் கொஞ்சம் கொஞ்சமாக அருகில் வரத்தொடங்கியது. அன்று இரவு நேரம் வரையிலும் ஜுரவேகத்தில் புரண்டு

கொண்டு, "இந்த வேலே நீ செய்ததில்லேயா? சொல்லு, கமலா!" என்று அவன் கத்தினன்.

விந்து தமையனின் முகத்தோடு முகம் வைத்து, "என்ன சொல்கிருய், அண்ணு?" என்ருள்.

காசிநாதன் விந்துவைக் கமலா என்று நினேத்து, அவளுடைய கழுத்தில் கை போட்டு, கருணே மிகுந்த குரலில், "நான் இறந்தும்கூட நீ சுகமடைய முடியாது—அது போகட்டும்; இது உன்னல் நடைபெற வில்லேயா? இதை மாத்திரம் ஒரே ஒரு தரம் சொல்லு" என்ருன்.

—

அத்தியாயம் 10

சிறிது நேரம் சுய நினைவு, சிறிது நேரம் நினைவிழந்த மயக்க நிலை—இப்படியாக மாறிமாறி, இரண்டு நாள் வரையில் கமலா தத்தளித்தாள். அவள் விஷயத்தில் டாக்டர்களுக்கு உள்ளுக்குள் ரொம்பப் பயம். ஆகையால், அவர்கள் சொன்ன பிரகாரம் மிகுந்த ஜாக்கிரதையுடன் அவளைச் சுற்றி அநேகம் பேர் இருந்தார்கள். இடைவிடாமல் இரண்டு நாள் சிகிச்சை செய்த பிறகு, அவளுக்குத் தன் நினைவு வந்தது. அவளைத் தூக்கி உட்கார வைத்தார்கள்.

நன்றாய்க் கண்ணை விழித்துப் பார்த்தாள். தான் இதுவரையிலும் யாருடைய மடியில் தலை வைத்திருந்தாளோ அவள் புதிதாக இருந்தாள்.

"நீ யார்?" என்று கமலா கேட்டாள்.

"நான் உன் கணவனின் சகோதரி."

கமலா வெகுநேரம் வரையிலும் விந்துவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதன் பிறகு, அறையிலிருந்த எல்லோரையும் வெளியே போகும்படி கையாலேயே சமிக்ஞை காட்டி விட்டு, மெதுவாக, "நான் எத்தனை நேரம் இப்படி மூர்ச்சையா யிருந்தேன், அக்கா?" என்று கேட்டாள்.

"முந்தா நாள் காலையில் மூர்ச்சை போட்டு விழுந்தாய்; அப்புறம் நினைவு வரவேயில்லை."

முந்தாநாள்! கமலா திடுக்கிட்டாள். அதன் பிறகு, தலை குனிந்து, சிலை போல உட்கார்ந்து

கொண்டிருந்தாள். வெகுநேரம் வரையிலும் அவளுடைய உடம்பில் ஒருவித அசைவையும் காணுததால், விந்து பயமடைந்து அவளது வலது கையைப் பிடித்துக் கொண்டு, "கமலா!" என்று கூப்பிட்டாள். கமலா தலை நிமிராமல் பதில் அளித்தாள்: "பயப்படாதே, விந்து! இனி நான் மயக்கமடைய மாட்டேன்" என்ருள்.

தன்னைச் சுய நினைவுடன் வைத்துக் கொள்வதற்கு உள்ளுக்குள் கமலா சிரமப்பட்டு முயற்சிக்கிருள் என்பதை விந்து அறிந்து கொண்டாள்.

இதனுல் விந்து தைரியமடைந்து, பேசாமல் உட்கார்ந்திருந்தாள். அப்புறம் கொஞ்ச நேரம் கழிந்த பிறகு, கமலா பேசத் தொடங்கினுள்: "நீ இரண்டு நாளாக என்னை வைத்துக்கொண்டு இப்படியே உட்கார்ந்திருந்தாயா, விந்து? அப்படியிருக்க உன்னுல் எப்படி முடிந்தது? என்னுல் முடியாதே" என்ருள்.

அவள் வார்த்தையை விந்து நன்ருய்ப் புரிந்து கொள்ளவில்லை: "ஏன் முடியாது, கமலா? நீ ஒன்றும் அந்நியளல்லவே? எங்களைப் பார்த்ததில்லை. இருந்தாலும், நீயும் அண்ணுவைப்போல எனக்குச் சொந்தம்தான். அவருக்குப் போலவே உனக்கும் சேவை செய்ய வேண்டியது என் கடமை, கமலா! உனக்குத் தெரியாது; நான் வந்ததிலிருந்து இந்த இரண்டு நாளும் எப்படிக் கழிந்ததோ, அது பகவானுக்குத்தான் தெரியும். ஒரு தரம் அண்ணனிடம் போவேன்; அப்புறம் உன்னிடம் வருவேன்—அண்ணுவின் அருகில் இருக்கும்போது, உன்னைப்

பற்றி மனது துடிக்கும்; உன்னருகிலிருக்கும் போது, அண்ணவைப் பற்றி மனம் திகிலடையும். இன்று சாயங்காலத்தி லிருந்து, அவருக்குக் கொஞ் சம் தேவலே. அவர் நன்ருகத் தூங்குவதால், நான் உன்னிடத்தில் ஸ்திரமாக உட்கார்ந்திருக்க முடிகி றது. இந்தக் கண்டத்திலிருந்து அண்ண பிழைத் துக் கொள்வான் என்று யாருக்கும் நம்பிக்கை யில்லாமலிருந்தது. ஏதோ, தெய்வச் செயல்!" என்ருள்.

"பிழைத்துக் கொண்டாரா?" என்று ஆவலு டன் கேட்டாள் கமலா.

விந்து தலேயை அசைத்து, "ஆம், பிழைக்காம லென்ன! இனிப் பயப்படவேண்டிய தில்லே. ஜுரம் இறங்கிவிட்டது என்று டாக்டர்களே சொல்லுகிருர்கள்" என்ருள்.

கமலாவின் முகம் திடீரெனப் பிரகாசித்து, பிறகு சவம்போல் மாறியது. அவளுடைய உடல் ஒரு முறை நடுங்கியது. அடுத்த கணமே அவள் மீண்டும் நினைவிழந்து, விந்துவின் மடியில் சாய்ந் தாள்.

விந்து சத்தமிட்டு யாரையும் கூப்பிடவில்லே. கமலாவின் தலேயைத் தன் மடிமீது வைத்துக் கொண்டு, மௌனமாக விசிறினுள். அவளிடம் இயற் கையாக எவ்வளவு தைரியமிருக்கிற தென்னும் சோதனே, அவளுடைய கணவன் நோயுற்றிருந்த போது தெரிந்திருக்கிறது. சாவு அவள் கணவனின் தலேமாட்டில் வந்து உட்கார்ந்திருந்தது; அப்போது கூட அது அவளே அசைக்கமுடியவில்லே; விந்து

இப்பொழுது கமலாவின் இந்த அற்ப மூர்ச்சைக் காக ஏன் கலங்குவாள்? சிறிது நேரத்துக் கப் புறம், கமலா கண் திறந்து, தான் எங்கிருக்கிறுள் என்று பார்த்தாள். இதன் பிறகு, விந்துவின் மடியில் குப்புறப் படுத்துக்கொண்டு மனம் குழைந்து அழத் தொடங்கிஞள்.

அவள் பெருக்கிய கண்ணீர், விந்துவின் மடியிலேயே உறையத் தொடங்கியது! அதில் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வெளியில் யாருக்கும் தெரியாது. வெளியில் அமைதியான இரவின் அந்தகாரம் பரந்து சூழ்ந்தது. உள்ளே குளிர்ந்த தோர் அறையில் இருந்த இந்த இரண்டு யுவதிகளில் ஒருத்தி, தனது உருகும் வெள்ளத்தின் பூரண ஜ்வாலையை மற்றவளின் ஆழ்ந்த அமைதியான மடியில் மௌனமாகப் போக்கிக் கொண்டிருந் தாள்.

கொஞ்சம் கொஞ்சமாகச் சாந்தமடைந்து, கமலா தன் கணவனைப் பற்றிக் கேட்டாள். ஆனல், அவள் தானே நேரில் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆவலை ஏன் வெளிப்படுத்தவில்லை என்பதை விந்து எவ்வளவோ யோசித்தும் அறிந்துகொள்ள முடியவில்லை. ஒரு சமயம் பெரிய மனிதர் வீட்டில் இம்மாதிரிதான் பழக்க வழக்கங்கள் இருக்குமோ என்று கூட அவள் நினைத்தாள். பணிவிடையின் பொறுப்பை யெல்லாம் வேலைக்காரர்களிடமே விட்டு ஒதுங்கி நின்று, தகவல் மட்டும் தெரிந்து கொள்வதாக்கும் என்றும் எண்ணிஞள். திடீ ரென்று கமலா, "சரி அக்கா! உன் அண்ணுவுக்கு

நினைவு வந்தபோது என்னைப்பற்றி ஒரு தரம் கூட அவர் விசாரிக்கவில்லையா" என்று வினவினாள்.

"ஒரு தரம் கேட்டார்" என்றாள் விந்து. கமலா ஒன்றும் பேசாமல் உற்சாகத்துடன், வியாகூலக் கண்களோடு விந்துவின் முகத்தையே பார்த்தாள்.

விந்து சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "நினைவு வந்ததும் அண்ணா என்னை நீ என்று நினைத்துத் தழுவிக்கொண்டு, பலமாக, 'இந்த வேலை நீ செய்ததில்லையா? சொல்லு, கமலா! நான் இறந்தால் கூட நீ சுகமடைய முடியாது. இது உன்னால் நடைபெறவில்லையா? இதை மாத்திரம் ஒரே ஒரு தரம் சொல்லிவிடு, கமலா!' என்றார்" என்று சொன்னாள்.

"அதற்கப்புறம்?"

"எனக்கொன்றும் தெரியாது. எதற்காக உன்னை இப்படிக் கேட்டாரோ!"

"அவர் என்ன அறிய விரும்புகிறார் என்பது எனக்குத் தெரியும் விந்து!" என்று சொல்லிவிட்டு, கமலா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

கமலாவின் கரத்தை விந்து பிடித்துக்கொண்டு, "நீ அந்த அறைக்குள் போகாதே, தங்காய்!" என்றாள்.

"ஏன், ஏன் போகக்கூடாது?"

"டாக்டர் தடுத்திருக்கிறார்; உனது உயிருக்கு ஆபத்து வந்துவிடுமாம்."

"எனது ஆபத்து, என்னைவிட டாக்டருக்கு அதிகம் தெரியுமோ, அக்கா. அவரிடம் நான் போகி

றேன். தூக்கம் கலைந்த பிறகு, அவர் மறுபடியும் இந்தக் கேள்வியைக் கேட்டால், நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்!'' என்று கூறிய கமலா, விந்துவின் கையைப் பிடித்துக்கொண்டு, தழதழத்த குரலில், "இல்லாவிட்டால், ஆயுள் உள்ள அளவும் நான் தலை நிமிர்ந்து நடக்க முடியாது, அக்கா! என்னைத் தயவு செய்து அவரிடம் போகவிடு'' என்றாள்.

இதற்குப் பிறகு, தன் மனதுக்குள்ளாகவே, "ஆண்டவா! இதுவரையிலும் என் மஞ்சளைக் (தாலி) காப்பாற்றி வந்தாய். இப்போது பொய்யை நிஜமென நிர்ணயம் செய்து அதைப் பிடுங்கிக் கொண்டு போய் விடாதே! எனக்குரிய தண்டனை எங்கே போய்விட்டது? அதைத்தான் அப்படியே வைத்திருக்கிறாயே! எந்தப் பலத்தினால் உன் கடூர மான தண்டனையனைத்தையும் நான் சிரித்த வண் ணம் தலையால் தாங்க முடியுமோ, எனது அந்தப் பலத்தை மாத்திரம் பறித்து விடாதே! இது போதும், பிரபுவே!'' என்று சொல்லிக் கொண் டாள்.

கணவனின் அறைக்குள் நுழைந்ததும், கமலா மனம் தளராம லிருக்க முடியவில்லை. இரண்டு நாள் உணவற்றிருந்த அவளது மெல்லிய சரீரமும், அதை விட அதிகப் பலவீன மடைந்திருந்த மூளையும் சுழன் றன. புருஷனின் காலடியில் அவள் போய் விழுந் தாள். காசிநாதன் அப்போது விழித்துக்கொண்டு தான் இருந்தான். யாரோ காலடியில் விழுந்ததாக அவனுக்குத் தெரிந்தது. ஆனால், எழுந்து பார்ப்ப

தற்கு அவனிடம் 'தென்பு' இல்லை. ஆகையால், அவன் படுத்துக்கொண்டே, "யார், விந்து?" என்று கேட்டான்.

"வேறு யாரும் இல்லை, அண்ணு! கமலாதான்" என்ருள் விந்து.

"கமலாவா! நீ இங்கே ஏன் வந்தாய், கமலா?"

காசிநாதனின் தலைமாட்டில் விந்து உட்கார்ந்து கொண்டு, "இவள் தன்னைத்தானே சமாளித்துக் கொள்ள முடியவில்லை; மயக்க மடைந்து விழுந் திருக்கிருள், அண்ணு!" என்ருள்.

காசிநாதன் பேசவில்லை. விந்து மறுபடியும், "நான் இன்று இரவு வரவேண்டாமென்று தடுத் தேன். இரண்டு நாளைக்கப்புறம் இப்பொழுதுதான் அவளுக்குப் பிரக்ஞை வந்தது. அப்படியிருக்க, எவ்விதம் இந்த அறைக்குள் வந்து, தன்னை அவள் அடக்கிக்கொள்ள முடியும்? இது எனக்கு நன்ருய்த் தெரியும்" என்ருள்.

கணவனின் கால்களுக்கிடையே, தனது முகத் தைப் புதைத்துக்கொண்டு, கமலா அவ்விதமே வெகுநேரம் படுத்திருந்தாள். அவளது சூடான கண்ணீர் வெள்ளத்தைத் தன் குளிர்ந்த கால்களி னுல் காசிநாதன் உணர்ந்தான். இதனுல் அவன் மெள்ள மெள்ள, "ஆம், அவள் இங்கே வராதிருந்தி ருப்பதே நல்லது" என்ருன்.

கமலாவைப் பார்க்கப் பார்க்க, விந்துவின் கண் களில் நீர் நிறைந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "நல்லதாய்த்தா னிருந்திருக்கும். ஆனுல், அப்படி யாராவது இருக்க முடியுமா, அண்ணு? நீ

குணமடைந்து விட்டாய். இந்த இரண்டு நாளையும் இவள் எவ்விதம் கழித்தாள்? அது எனக்கும் கடவுளுக்கும்தான் தெரியும்; அவளுக்கே கூடத் தெரியாது" என்றாள்.

காசிநாதன் கண்ணை மூடிக்கொண்டு, தன் வெளித் திருஷ்டியை யெல்லாம் கணநேரத்தில் உள்ளே திருப்பி, உலகத்தின் சகல ஜீவராசிகளிடத்திலும் வசிக்கும் அந்தர்யாமியின் பாதத்திலே ஒரு கேள்வியை ஸமர்ப்பித்துப் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அதன் பிறகு கண்ணைத் திறந்து, "என் உயிருக்கு இனிப் பயமில்லை, கமலா! எழுந்து உட்கார்" என்றான்.

"அண்ணா! என்னிடம் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவே கமலா வந்திருக்கிறாள்" என்றாள் விந்து.

காசிநாதனின் உலர்ந்த உதடுகளில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. "இனி யாருக்கும் ஒரு பதிலும் அவள் சொல்ல வேண்டியதில்லை, விந்து! இந்த இரண்டு நாளாக மூர்ச்சையாய்க் கிடந்திருக்கிறாளே, அதிலிருந்தே எனக்குப் பூராப் பதிலும் கிடைத்து விட்டது" என்று சொல்லி, தன் இடது கையை ஊன்றி, அவன் எழுந்து உட்கார்ந்தான். பிறகு, வலது கையால் கமலாவின் முகத்தைத் தூக்குவதற்கு முயற்சித்துக் கொண்டு, "கமலா!" என்று அழைத்தான்.

கமலா ஒன்றும் பேசவில்லை, அவள் அப்படியே அசையாமல் அவனுடைய காலின்மேல் முகத்தை வைத்துக்கொண்டிருந்தாள். அவளுடைய

கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் பெருகிக் கொண்டே யிருந்தது.

"விந்து!" என்று அழைத்தான் காசிநாதன்.

விந்து கவலையுடன், "நீ தூக்காதே, அண்ணா! டாக்டர் சொல்லிப் போயிருக்கிறார். அப்புறம்—" என்றாள்.

காசிநாதன் புன்சிரிப்புடன், "டாக்டர் என்ன சொன்னாலும், இனிப் பயப்பட வேண்டியதில்லை யென்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். இந்தக் கண்டத்திலிருந்து நீங்கள் என்னைக் காப்பாற்றி விட்டீர்கள்" என்றான்.

அதன் பிறகு காசிநாதன், கமலாவின் கலைந் திருந்த கூந்தலைச் சிறிது நேரம் கோதிக்கொண் டிருந்து விட்டுப் படுத்துக்கொண்டான்.

முற்றிற்று.

THE FREE INDIA PRESS, MADRAS

புது மலர் 2.

கன்னிகா ஸ்திரி

முதலிய சிறு கதைகள்

2461

ஆசிரியர்கள் :

ரா. ஆறுமுகம்

ரா. வெங்கடாசலம்

புஸ்தகம் கிடைக்குமிடம் :—

புதுமலர் நிலையம்

35, வெரைட்டிஹால் ரோடு, கோயமுத்தூர்